குண்டூசி

ஜனவரி எட்டு அணா

362

OFFICE OF THE REGISTRAR OF
4-FEB 1949
MADRAS
353
362

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானால், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன் : 4037

தந்தி : "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.

ஜூபிடர்
பிக்சர்ஸ் மகிழ்ச்சியுடன்
வெளியிடப்போகும்.......
வேலைக்காரி
கதை. வசனம்: ஸி.என். அண்ணாத்துரை · டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி
எம்.வி.ராஜம்மா • வி.என். ஜானகி • கே. ஆர்.ராமஸ்வாமி
டி.எஸ்.பாலையா நடித்தது • நடனங்கள் • லலிதா – பத்மினி
சீக்கிரமே வெளிவருகிறது

போட்டி, வெற்றி சுலபம்

உங்கள் அறிவிற்கும் திறமைக்கும் ஏற்ற பயிற்சி.
ஓய்வு நேரத்திற்கு சிறந்த பொழுது போக்கு.

குறைந்த செலவில் நல்ல வருமானம்

நீங்கள் இருக்கும் இடத்திலேயே அடையலாம்.
இந்தியா, பாகிஸ்தான், இலங்கையிலுள்ள ஆண் பெண் சிறுவர் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

I. 12000
II. 7000

25,000★

III. 4000
IV. 2000

2	5	16	15
14	17	4	3
13	10	7	8
9	6	11	12

போட்டி — D-46.

4 முதல் 19 வரையிலுள்ள எண்களை இந்தக் கட்டத்தில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், மூலைக்கு மூலையும் எப்படிக் கூட்டினாலும் 46 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்கலாம்.

உங்கள் விடைகளை

16-2-49ந் தேதிக்குள் தபாலில் போடவும்

பரிசு ஜாபிதா 26-2-49ந் தேதி எல்லோருக்கும் அனுப்பப்படும்.

மதுரை லயன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைக்கப்பட்டிருக்கும் சரியான விடைக்கு எண்ணுக்கு எண் கட்டத்திற்குக் கட்டம் சரியான விடைக்கு முதற்பரிசும், முதல் இரண்டு வரிசை மட்டும் சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் ஒரு வரிசை மட்டும் சரியான விடைக்கு 3-ம் பரிசும், அதிகப்படியான விடைகளை அனுப்புபவருக்கு 4-ம் பரிசும் அளிக்கப்படும்.

பிரவேசக் கட்டணம் : முதல் விடைக்கு ரூ. 1-0-0
அதிகப்படி ஒவ்வொரு விடைக்கும் அணா 0-12-0 மாத்திரம்.

பாங்கில் வைத்துள்ள விடைக்கு சரியாயிருக்கும் உங்களுடைய விடை ஒவ்வொன்றிற்கும் பரிசு உண்டு. ஆதலால் நீங்கள் எத்தனை விடைகளை வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயார் செய்து அனுப்பலாம். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் அட்ரஸ் எழுதிய கவர் ஒன்றை வைத்து அனுப்பவும். நிகர வசூலுக்குத் தக்கபடி பரிசுத்தொகை கூடும் அல்லது குறையும். *12000, 7000, 4000, 2000*(மொத்தம் **25000*) விகிதாசாரப்படி நிகர வசூலை வகுத்து பரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். மற்ற விதிகள் வழக்கம் போல்.

லக் & கோ., Firm No. 1564 (Govt. Regd.) 43/23, ஈஸ்வரன் தெரு, மாம்பலம், மதராஸ். 17.

13 4113



இந்த ஊசியில்

பட்டை-2. ஊசி - 4.

ஜனவரி 1949

1	டூரிங் சினிமாக்கள் ...	தலையங்கம்	5
2	உள்ளது உள்ளபடி ...	'ஜடாயு'	6
3	டூரிங் சினிமா மகாநாடு...	செய்தி	9
4	வி. நாகய்யா	வாழ்க்கை வர்ணனை	10
5	வி. நாகய்யா ...	ஆர்ட் படம்	11
6	மகாத்மா காந்திஜி ...	ஆர்ட் படம்	12
7	பேஷான யோசனை ...	கே. மகாதேவன்	13
8	குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	15
9	செய்திப் படங்கள் ...	படங்கள்	31
10	நுனிப்புல் ...	'வெட்டுக்கிளி'	39
11	பொதுஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	42
12	ஹிந்தி சந்திரலேகா ...	பட விமர்சனம்	45
13	நல்ல தம்பி ...	படக் கதை	47
14	எம். வி. ராஜம்மா ...	மூவர்ணப் படம்	51
15	டி. எஸ். பாலய்யா ...	ஆர்ட் படம்	52
16	இது செய்தி ...	செய்திகள்	53
17	கிருஷ்ண பக்தி ...	பட விமர்சனம்	58
18	பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	59
19	குண்டூசி டைரி ...	தினக் குறிப்பு	68

அட்டைப் படம் — பானுமதி

இந்திய நாட்டில் விதவைகளின் எண்ணிக்கை
ஏராளம்?

இயற்கை இன்பத்தை இழந்து, இகழ்ச்சிக்குட்பட்டு, வாழ்நாளை
வீண் நாளாய்க் கழிக்கும் கன்னியர் அநேகம்.

விதவையின் கண்ணீர்

விதவைகள் சம்பந்தமான பிரச்னை விரிவாக விளக்கப்பட்டுள்ள
புஸ்தகம். எல்லோரும் அவசியம் படிக்க வேண்டியது.

விலை 8 அணாதான்

மோஹன் அன் கோ,

தபால் பெட்டி நம்பர் 493
கொழும்பு, இலங்கை.

சந்தா விபரம்

	இந்தியா	இலங்கை	வெளிநாடு
ஒரு வருஷ சந்தா:	ரூபாய் 6.	ரூபாய் 6.	ரூபாய் 9.
தனிப் பிரதி:	அணா 8.	சதம் 50.	அணா 12.

விளம்பர விகிதங்கள்

ஒரு தடவைக்கு

அட்டை விளம்பரங்கள்		சாதாரண விளம்பரங்கள்	
முன் பக்கம் ...	ரூ. 450	ஒரு பக்கம் ...	ரூ. 75
கடைசிப் பக்கம் ...	ரூ. 250	அரைப் பக்கம் ...	ரூ. 40
2 (அ) 3-ம் பக்கம் ...	ரூ. 150	$\frac{1}{3}$ பக்கம் ...	ரூ. 30
		கால் பக்கம் ...	ரூ. 25

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:

மானேஜர், "குண்டூசி" காரியாலயம்,
246, தம்புச்செட்டித் தெரு, :: :: சென்னை—1.

பட்டை 2
ஊசி 4

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

ஜனவரி
1949

டூரிங் சினிமாக்கள்

படித்தவர்களை விட படிக்காதவர்களும், நகரங்களை விட கிராமங்களுமே மிகுதியாய் உள்ள தேசம் இந்தியா. மேனாடுகளின் ஜனத்தொகையையும் அங்குள்ள தியேட்டர்களையும் கவனிக்கும் போது, இந்தியாவின் பெரும் ஜனத்தொகைக்கு சொற்ப தியேட்டர்களே இருப்பதை அறியலாம். இந்திய மக்களுக்குத் தகுந்த பொழுது போக்கு வசதி ஏற்பட வேண்டுமானால் இன்னும் அநேக நூறு தியேட்டர்கள் கட்டப்பட வேண்டும்.

ஆனால் இப்பொழுது சிமெண்டிற்கும், இரும்பிற்கும், மரத்திற்கும் வேறு அவசியம் இருப்பதால் சினிமாக் கொட்டகைகளுக்கு இவைகளைத் தரக்கூடாதென்று மத்திய சர்க்கார் கூறியிருக்கின்றனர். ஆதலால் நிரந்தரத் தியேட்டர்கள் தோன்றுவது சாத்தியமில்லாத காரியம். அப்படியே சர்க்கார் அனுமதித்தாலும் கிராமப் புறங்களில் நிரந்தரத் தியேட்டர்களைக் கட்டுவதில் எவ்வளவோ இடையூறுகள் உள்ளன. முதலாவதாக, மின்சார வசதி வேண்டும். நிரந்தரமான போதிய வசூல் இராது. நிர்வாகச் செலவும் அதிகரித்துப் போகும். ஒரு தியேட்டரைக் கட்டிய பின் வசூல் இல்லாவிட்டால் அதை இடித்துக் கொண்டு போக முடியாது.

இப்பொழுதோ மாகாணம் பூராவிலும் மதுவிலக்கு ஏற்பட்டிருக்கிறது. மது வழக்கமிருந்தவர்கள் அதை மறப்பதற்கு சினிமாக்கள் சிறந்த சாதனமாகும். இந்த சமயத்தில் டூரிங் சினிமாக்கள் கிராமப் புறங்களில் அதிகம் நடமாடுவது நலம். ஆதலால் இந்த டூரிங் சினிமாக்கள் விஷயத்தை சர்க்கார் அக்கரையுடன் கவனிப்பது அவசியம்.

தென்னிந்தியாவில் டூரிங் சினிமாக்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அரக்கோணம் மகாநாட்டுத் தீர்மானங்கள் தெரிவிக்கின்றன. லைசென்ஸ் வாங்குவதிலும், மற்ற விஷயங்களிலும் சர்க்கார் அதிகாரிகள் தொந்தரவு கொடுப்பதாக புகார்கள் கிளம்புகின்றன. டூரிங் சினிமாக்களால் கிராம மக்களுக்கு ஏற்படும் நன்மையை மனதில் கொண்டு, சர்க்கார் டூரிங் சினிமாக்களுக்குத் தற்போது இருந்து வரும் அசௌகரியங்களைப் போக்க முற்பட வேண்டும். அதோடு கூட மேலும் ஏராளமான டூரிங் சினிமாக்களை ஆரம்பிப்பதற்கான சௌகரியங்களையும், உத்சாகத்தையும் சர்க்கார் அளிக்க வேண்டும்.

உள்ளது உள்ளபடி

நீளக் கட்டுப்பாடு சம்பந்தமாக சர்க்காரின் போக்கைக் கண்டித்து "குண்டூசி"யில் எழுதப் பட்டிருந்தது. அதே சமயத்தில் தமிழ்ப் படங்களுக்கு 13,000 அடி நீள நிர்ணயம் செய்ததை நான் ஆதரித்து எழுதி யிருந்தேன். சர்க்கார் பிறப்பித்துள்ள நீளக் கட்டுப்பாடு உத்திரவும், நேரக் கட்டுப்பாடு உத்திரவும் முன்பே தயாரிக்கப் பட்ட படங்களைப் பாதிக்காது என்று அவர்கள் தெரிவித்து விட்டனர். சர்க்கார் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டதற்காக சந்தோஷிக்கிறோம்.

ஆனால்..........?

அவர்கள் மீண்டும் ஒரு தவறைச் செய்திருக்கிறார்கள். அதாவது நீளக் கட்டுப்பாடு உத்திரவு ஜனவரி 1-ந் தேதிக்குப் பதில் மார்ச் 1-ந் தேதி அமுலுக்கு வரும் என்றும் அந்த தேதிக்குப் பிறகே 13,000 அடிக்கு மேற்பட்ட படங்கள் தணிக்கைசெய்யப்பட மாட்டாதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாறுதல் உத்தரவு மூலம் பட முதலாளிகளுக்கு மிகுந்த வசதி ஏற்பட்டு விடாது. சர்க்கார் அனுமதித்திருக்கும் இரண்டு மாத காலத்திற்குள், எவ்வளவு பட முதலாளிகளால் தாங்கள் பழைய நீளத்தில் தயாரித்துக் கொண்டிருக்கும் படங்களை முடித்துத் தணிக்கை செய்து கொள்ள முடியும என்பது சந்தேகமே.

தற்போது பெரும்பாலான ஸ்டுடியோக்களில் வேலை ஆமை வேகத்திலேயே நடந்து வருகிறது. இது ஒருபுறமிருக்க படங்களில பல தடைப்பட்டு நிற்பதற்குக் காரணம் பண வசதிக் குறைவு தான். ஆகவே, இரண்டு மாதத்திற்குள் பண ஏற்பாட்டைச் செய்யவும் முடியாது; படத்தை முடிப்பதென்பதும் ஆகாத காரியம். இந்தக் குறுகிய காலத்தில் (தற்போதைய சினிமா உலக நிலைமையில்) கடைசி ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும் படங்களையும், எடிட்டிங் ஆகி வரும் படங்களையும் மட்டுமே முடிப்பது சாத்தியமாகும்.

விதிவிலக்கு அவசியம்

முன்பு பதினோராயிரம் அடிக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்ட போது, ஓரளவு தயாரான படங்களின் விஷயங்களைச் சர்க்கார் பரிசீலனை செய்து விதிவிலக்கு அளித்திருக்கின்றனர். அதுபோலவே இப்பொழுதும் செய்ய வேண்டும். முன்பே திட்டம் போட்டு பாதிக்கு மேல் தயாரான படங்களின் விஷயங்களைப் பரிசீலனை செய்து, அவைகளுக்கு விதி விலக்கு அளித்து விட வேண்டியது தான் நியாயம். இதை சர்க்கார் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இருதலை விரியன்!

இருதலை விரியன் பாம்பைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அதற்கு

இரண்டு தலையாம்; வாலே கிடையாதாம். சமயோசிதம் போல் முன் பக்கமோ பின் பக்கமோ ஊர்ந்து செல்லுமாம். இந்த இருதலை விரியனைப் பற்றி உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் தென்னிந்திய பிலிம் சேம்பர் என்ற விசித்திர ஸ்தாபனம் இருக்கிறதே; அதன் நடவடிக்கைகளை கவனிப்பவர்களுக்கு அதை "இருதலை விரியன் ஸ்தாபனம்" என்று சொல்லத் தோன்றும். படங்களின் நீளத்தை சர்க்கார் குறைக்க விரும்புவதாகக் கூறியதும் "கட்டுப்பாடே கூடாது" என்று ஒரு தீர்மானம் சேம்பரிலிருந்து கிளம்பியது. சிறிது காலத்திற்குப் பிறகு. "தென்னிந்தியப் படங்களுக்கு 13,500 நீளம் அனுமதிக்கப் பட வேண்டும்" என்று இன்னொரு தீர்மானமும் கிளம்பியிருக்கிறது!

கேலிக் கூத்து

தனிப்பட்ட நபர்கள் தனித்தனிக் கொள்கையை பிரசாரம் செய்வது தவறல்ல. ஆனால் அவர்கள் கூட இன்றைக்கு ஒரு அபிப்பிராயம்; நாளைக்கு ஒரு அபிப்பிராயம் என்று சொல்லிக் கொண்டே போனால், அவர்கள் நன்மதிப்பை இழப்பார்களல்லவா? அப்படியிருக்க தென்னிந்தியப் படத் தொழிலின் பிரதிநிதிகள் அடங்கிய—சர்க்காரின் அங்கீகாரம் பெற்றுள்ள—ஸ்தாபனமான பிலிம் சேம்பர் இப்படி ஒன்றுக்கு இன்னொன்று முரணான தீர்மானங்களை நிறைவேற்றி, தங்களையும் சர்க்காரையும் குழப்பி வருவது கேலிக்கூத்தாயிருக்கிறது.

பழுதான அஸ்திவாரமா?

இந்த மாதிரியான முரண்பாடுகள் காரணமாகவே தாம் ராஜீனாமாச் செய்து விட்டதாக சேம்பரின் காரியதரிசியாய் இருந்த ஸ்ரீ. ராமனாத் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்த மாதிரி முரண்பாடுகள் ஏற்படக் காரணங்கள் என்னவென்பதையும் தெளிவாய்க் கூறியிருக்கிறார். அதிலிருந்து படத் தொழிலில் பட முதலாளி வர்க்கம் ஒன்றுதான் நீளக் கட்டுப்பாட்டை எதிர்க்கிறது என்பது புலனாகிறது. சேம்பரோ சினிமாப் படத் தொழிலின் எல்லாப் பகுதியினரையும் அங்கத்தினராய்க் கொண்டுள்ளது. ஆதலால் நீளக் கட்டுப்பாட்டை நிர்வாகக் கமிட்டியும், பொது அங்கத்தினர் கூட்டமும் ஆதரிக்கின்றன. ஆனால் சேம்பரின் அங்கத்தினர்களாயுள்ள பட முதலாளிகளின் கூட்டத்தில் இத் தீர்மானம் தோல்வியுறுகிறது! இதற்குக் காரணம் சேம்பரின் அமைப்பு விதிகள் தாமென்று ஸ்ரீ. ராமநாத் கூறுகிறார். எது எப்படியானாலும், சேம்பரிலிருந்து ஒரே ஒரு தீர்மானந்தான் கிளம்பவேண்டும். அதற்கு ஆவனவற்றை உடனே செய்யவேண்டும். சேம்பரை இப்பொழுது தகர்ந்து போகும்படி செய்து விடுவது சுலபம். ஆனால் இந்த சேம்பர் போன்ற ஸ்தாபனத்தை மீண்டும் ஸ்தாபிப்பது மிகக் கஷ்டமாகும். ஆதலால், சேம்பர் சம்பந்தப்பட்டவர்கள் என்ன செய்தாலும் சரி; சேம்பரிலிருந்து இனி முரண்பாடான தீர்மானங்கள் வெளிக் கிளம்பாமல் பார்த்துக் கொள்ளுவார்களாக.

கடவுள்களும் சினிமாவும்

சமீபகாலமாக சென்னை சர்க்காரின் கவனம் சினிமாவின் பக்கம் திரும்பியிருப்பது சந்தோஷிக்கத் தக்கதே. ஆனால்

ஜடாயு

அவர்களுடைய யோசனைகளும் உத்தரவுகளும் சில சமயங்களில் தாறுமாறாய் இருப்பதுதான் வருத்தத்தை அளிக்கிறது. "சினிமாப் படங்களில் கடவுள்கள் கன்னாபின்னாவென்று சித்திரிக்கப்படுவதால், இனி கடவுள்களையே சினிமாவில் காட்டக் கூடாதென்று உத்தரவு போடலாமா?" என்று சர்க்கார் யோசிக்கிறார்களாம். இது முற்றிலும் அர்த்தமற்ற மோசனையாகும். மூட்டைப்

பூச்சியை ஒழிப்பதற்காக வீட்டையே கொளுத்தும் புத்திசாலித்தனத்தை ஒத்திருக்கிறது இது. கடவுள்களை நம் பட முதலாளிகள் சின்னபின்னப் படுத்துவதும், புராணத்தின் பெயரில் புதுக் கதைகளைச் சிருஷ்டிப்பதும், ஆபாசப்படுத்துவதும் உண்மைதான். இதைத் தடுக்க சர்க்கார் கடுமையான முறைகளைக் கையாளலாம். அதையும் மீறித் தயாரிக்கப்பட்டால் தணிக்கை போர்டு இருந்தே இருக்கிறது. இதை யெல்லாம் மீறியும் புராண ஹதம் நடந்துவிடாது. கடவுள்களை நம் பட முதலாளிகள் கைவிட்டால் அவர்களைக் கடவுள்கள் கைவிட்டுவிடுவர்! ஆதலால் சர்க்கார் இந்த மாதிரியான எண்ணங்களை விட்டொழிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கன்னியின் காதல்

இம் மாதம் 19-ந் தேதி ஜுபிடர் பிக்சர்ஸார் கன்னியின் காதல் என்ற தங்கள் புதிய படத்தின் பூஜையை நடத்தினார்கள். இதுதான் ராம்நாத் சேகர் தயாரிப்பு. இப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலி தேவி, மாதுரிதேவி, வை ஜயந்திமாலா முதலியவர்கள் நடிப்பார்களென்றும் தெரிகிறது.

நல்லதம்பி பத்திரிகைக் காட்சி

இம் மாதம் 25-ந் தேதி என்னெஸ்கே பிலிம்ஸ் நல்லதம்பியின் பத்திரிகைக் காட்சி, சென்னை பாரகனில் ஸ்ரீ. காமராஜ் நாடார் தலைமையில் நடைபெற்றது. மந்திரி கனம் மாதவ மேனன், ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன், தியாகராஜ பாகவதர். மற்றும் அநேக பிரமுகர்களும் பத்திரிகாசிரியர்களும் வந்திருந்தனர்.

தியேட்டரில் தீ விபத்து

இம் மாதம் 24-ந் தேதி உதகமண்டலம் புளூமவுண்டன் டாக்கீஸில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. ஒரு படத்தின் சுருள் தீ பிடித்துக் கொண்டதாகவும் தெரிகிறது.

இன்ப இரவு

ஸ்ரீ ராமபாலகான விநோத சபையார் இம்மாதம் 13-ந் தேதி முதல் இன்ப இரவு என்ற நாடகத்தை திண்டுக்கல் சோலை ஹாலில் நடித்து வருகின்றனர். மோஹன் என்ற கதாபாத்திரமாக நடிக்கும் ஆர். ஏ. குமரப்பாவின் நடிப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறதாம்.

படத் திறப்பு விழா

இம் மாதம் 18-ம் தேதி காங்கிரஸ் கண் காட்சியிலுள்ள டாக்குமெண்டரி படத் தியேட்டரில், மகாத்மா காந்தியின் படம் ஒன்றை காங்கிரஸ் ராஷ்டிரபதி ஸ்ரீ. பட்டாபி சீதாராமையா திறந்து வைத்தார். மேற்படி விழா தென்னிந்திய பிலிம் சேம்பரின் சார்பில் நடைபெற்றது, இப் படம் டைரெக்டர் ஸ்ரீ. எஸ். சௌந்தரராஜனால் சேம்பருக்குக் கொடுக்கப் பட்டதாகும்.

கட்டுப்பாடு பற்றிய விவாதம்

இம் மாதம் 18ம் தேதி ஒய். எம். ஸி. ஏ. சங்கத்தில் சர்க்காரின், சினிமாப் பட நீளக் கட்டுப்பாடு உத்திரவு பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. மேற்படி விவாதத்திற்கு 'அப்ஸர்வராக' இருந்த ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் 'தென்னிந்தியப் படங்களுக்கு அதிகமான நீளம் தேவை' என்பது பற்றியும், கட்டுப் பாட்டினால் நேரக் கூடிய தீமைகளைப் பற்றியும் பேசினார்.

பதினொருவது ஆண்டுவிழா

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் தமது மதுரை தேவி பால விநோத சங்கீத சபாவின் பதினொரும் ஆண்டு பூர்த்தி விழாவை இம்மாதம் 11-ம் தேதி மதுரையில் கொண்டாடினார். வழக்கம் போலவே இவ் வருஷமும் பல ஏழைகளுக்கு அன்ன தானம் செய்தார்.

டூரிங் சினிமா மகாநாடு

லைசென்ஸ் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வற்புறுத்தல்

தென் இந்திய டூரிங் சினிமா சொந்தக்காரர் முதல் மகாநாடு சென்ற 7-ந் தேதி அரக்கோணம் டவுன் ஹாலில் தென் இந்திய பிலிம் சேம்பரின் தலைவர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யத்தின் தலைமையில் நடைபெற்றது.

பல ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகளும் பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். பிரார்த்தனைக்குப் பின் கன்வீனர் ஸ்ரீ. டி. ராமானுஜம் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்

தலைமை வகித்த ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் பிறகு பேசுகையில் குறிப்பிட்டதாவது :

"பொது மக்களின் கலை, ஆசாரம் தொழில், வாணிபம் எல்லாமே சினிமா மூலம் உயர்வடைகிறது கிராமங்கள் நிறைந்த சுதந்திர இந்தியாவை பல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய டூரிங் சினிமாக்கள் சிறந்த சாதன மாகும்.

"நமது சர்க்கார் சினிமாவின் அத்யாவசியத்தை உணர்ந்து, நமக்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் பல நிர்ப்பந்தங்கள் விதிப்பது நமக்கு அச்சத்தையே தருகிறது. ஆட்சிநடத்துபவர்களின நோக்கம நல்லதாயிருந்தாலும் சரியான தகவல் அறியாமல சில விபரீதங்களைச் செய்துவிடுகின்றனர். நாடும், சர்க்காரும் ஒத்துழைத்தால்தான் பொது மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்ய முடியும்.

"நாட்டில் கல்வி அறிவு வளரவேண்டும். தேசிய சர்க்காருக்கு ஆதரவான பிரசாரம செய்யவேண்டும. இதற்கு சினிமாவை நன்கு பயன்படுத்தவேண்டும்" என்ருர்.

பிறகு பிலிம் சேம்பரின் காரியதரிசி ஸ்ரீ. பி வி. கிருஷ்ணய்யர் மகாநாட்டைத் திறந்து வைத்து சினிமா தொழிலில் உள்ள கஷ்டங்களை சர்க்கார் நிவர்த்திக்க வேண்டு மென்ருர்.

தேசீய சர்க்காருக்கு விசுவாசமும் நன்றியும் தெரிவித்துக் கொள்வதாகவும், சினிமா சம்பந்தமான சட்டங்களை நிறைவேற்றும் போது பொது ஜன அபிப்பிராயத்தை சர்க்கார் அறிவது அவசியமென்றும், ஜனத் தொகையைக் கணக்கிடும்போது ஐந்து மைல் சுற்று வட்டாரத்தை ஒரு தொகுதியாக மதிக்க வேண்டுமென்றும், ஐயாயிரம் ஜனத் தொகைக்கு ஒரு சினிமாவீதம் லைசென்ஸ் அளிக்க வேண்டு மென்றும், நிர்ப்பந்தங்களையெல்லாம் ஒழித்து வசதி செய்து தரவேண்டுமென்றும், தற்போது லைசென்ஸ் காலம் ஆறு மாதம் என்றிருப்பதை ஒரு வருஷமாக அதிகரிக்கும்படியும், சினிமா தணிக்கை போர்டில் இச்சங்கத்துக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும், சினிமா சம்பந்தமாக ஓர் தனி இலாகாவை அமைப்பது அவசியமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாகஸ்தர்கள் : கே. சுப்ரமண்யம்— தலைவர், எம். ரங்கநாத முதலியார், ஸ்ரீநிவாஸ ஐயர் — உப தலைவர்கள், டி. ராமானுஜம், மாணிக்க முதலியார்–காரியதரிசிகள், கே. ஜனர்த்தன ரெட்டியார் பொக்கிஷதார், மற்றும் 11 கமிட்டி மெம்பர்கள.

டி. ராமானுஜம் வந்தனம் கூற மகாநாடு முடிவடைந்தது.



சித்தூர் வீ

வாழ்க்கை வர்ணனை

குண்டூசி

நீங்கள் ஒரு புதிய ஊருக்குச்சென்று அங்கே ஒரு பெரிய மனிதரைப் பார்ப்பதற்காகப் புறப்படுகிறீர்கள். போகும் வழியில் அவசரமாக முகக்ஷவரம் செய்து கொண்டு போய்விடலாமென்று, ஒரு "ஸலூன"க்குள் நுழைகிறீர்கள். ஆனால் உள்ளே சென்றதும் உண்மையில் 'அது ஒரு ஸலூன் அல்ல; ஆனால் செருப்புக் கடை' என்பதை அறிகிறீர்கள்!

சரி; இந்த விபரீதத்தைப் பற்றி அந்தக் கடைக்காரரிடம் கேட்பதற்

தம் ஆருயிர் மனைவியையும் இரு குழந்தைகளையும் இழந்தார். மறு விவாஹம் செய்துகொண்டார். இரண்டாம் மனைவியும் இறந்தார். அதோடு அருமைத் தந்தையும் மறைந்தார். மூன்றே வருஷங்களுக்குள் இவ்வளவும் நிகழ்ந்தன. நாகய்யா உலக வாழ்க்கையை வெறுத்தார். ஊரூராய்ச் சுற்றி அலைந்தார். முடிவில் சினிமா உலகம் அவருக்கு சாந்தி அளித்தது.

நாகய்யா

குக்கூட உங்களுக்கு நேரமில்லை. பக்கத்திலுள்ள ஹோட்டலில் ஒரு கப் காப்பியைச் சாப்பிட்டு விட்டு பஸ்ஸில் தாவலாம் என்ற எண்ணத்துடன் உள்ளே செல்கிறீர்கள். ஆனால் அங்கும் ஏமாற்றமே. அது ஒரு காப்பி கிளப்பிற்குப் பதில் ஒரு பித்தளைப் பாத்திரக் கடையாய் இருப்பதாய் வைத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்?

ஒருவர், மண்டை உடைந்து ரத்தம் கொட்டும் தம் குழந்தையுடன் ஒரு டாக்டர் வீட்டிற்குப் பதில் ஒரு வக்கீலின் வீட்டிற்குள் நுழைகிறார்! வேறொருவரோ பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் தம் மனைவிக்கு மருத்துவச்சியை அழைத்து வருவதற்காக ஒரு ஆடிட்டரின் வீட்டில் நுழைகிறார்! இன்னொருவரோ ஆடிட்டரைத் தேடிக்கொண்டு ஒரு பருத்துவச்சியின் வீட்டிற்குள் நுழைகிறார்! இப்படியெல்லாம் விபரீதங்கள் நிகழ்ந்தால் அதைப் பார்ப்பவர்களுக்கு தமாஷாய்த்தானிருக்கும்! ஆனால் இவ்வளவுக்கும் காரணமாக, பெயர்ப் பலகைகளை தன் மனம் போல மாற்றி மாட்டி வைத்த அந்தச் சிறு பையன் நாகய்யா மட்டும் இப்படி ஏமாந்தவர்களின் கையில் அகப்பட்டிருந்தால், அவன் உடம்பில் எலும்பு இருக்கும்படியா விட்டிருப்பார்கள்? நலல வேளையாக நாகய்யா "எலும்பில்லாத மனிதன்" என்ற புகழை அடையவில்லை! அகப்பட்டுக் கொள்ளுவதற்கு முன்பே அவர், நல்ல வேளையாக, இந்தக் குறும்புத் தனத்தை நிறுத்தி விட்டார்!

ஏழெட்டு வயதுப் பையனாயிருந்தபோது நாகய்யா மஹா துறுதுறுப்பும், விஷமமும் நிறைந்தவராயிருந்தாராம். ராபர்ட் கிளைவ் மாதிரி பையன்களை கோஷ்டி சேர்த்துக் கொண்டு அவர் இந்த விஷமங்களை செய்வாராம். பிற்காலத்தில் கிளைவ் தன் சேஷ்டைகளையெல்லாம் விட்டு, இந்திய நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டான். நாகய்யாவும் அது போலவே சேஷ்டைகளை விட்டதோடு நல்லவராகவும் மாறி, ஒரு (சினிமா) உலகத்தையே 'அடிமை'ப்படுத்திக் கொண்டிருக்கிறாரல்லவா?

நாகய்யா இவ்வளவு துணிபுடன் விஷமங்களைச் செய்து வந்தாரே யொழிய அவருக்குத் தாடிச் சாமியார்களைக் கண்டால் அப்பொழுதெல்லாம் ரொம்பவும் பயமாம். அவர்களுடைய காலில் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்வாராம் நாகய்யா. பய பக்தியுடன் அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வாராம். வீட்டிலிருந்து தின்பண்டங்கள் முதலியவைகளை பெற்றோர்களுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டுபோய் அவர்களிடம் சமர்ப்பிப்பாராம். அந்த (போலிச்) சாமியார்கள் நாகய்யாவை 'ஆசீர்வதித்து'விட்டோ, அல்லது நல்ல 'வரன்களை' அருளிவிட்டோ செல்லுவது வழக்கமாம்! இப்பொழுதுகூட. சினிமாப் படங்களுக்காக அவரது முகத்தில் தாடி ஒட்ட வைக்கப்படும் போது, இந்தச் சாமியார்களைப் பற்றியும் அவர்களிடம் தாம் கொண்டிருந்த பயபக்தியைப் பற்றியும் அவருக்கு ஞாபகம் வராமலிருப்பதில்லையாம்!

இப்பொழுதுதான் அவர் மாயசக்தி வாய்ந்த மஹானுகை





நடிக்கிறார் என்று நினைக்கவேண்டாம். சிறு பையனாக இருக்கும் போதே அவர் மாய சக்தி உடையவர் போல பல நாள் நடித்திருக்கிறார்!

பால்யத்தில் நாகய்யாவின் ஆப்த நண்பனாக ஒரு கம்மா ஜாதிப் பையன் விளங்கிவந்தான். அவன் ஒரு அப்பாவி; ஆனால் பணக்கார வீட்டுப் பையன். நாகய்யாவின் தகப்பனார் நல்ல சம்பளத்தில் தாசில்தார் உத்தியோகம் பார்த்து வந்தாரென்றாலும் பையனுக்குக் காசு கொடுக்கும் வழக்கமில்லாதவர். ஆதலால், "சில்லரைத் தீனி"க்கான காசுக்கு நாகய்யா ஒரு தந்திரம் செய்வாராம். தம் நண்பனை அந்தப் பணக்காரப் பையனிடம் கைநிறையக் காசை அள்ளிவரச் சொல்வாராம். அவன் கொண்டு வந்ததும், "இந்தக் காசுகளைப்



புதைத்து வைத்தால் செடி முளைக்கும். அப்புறம் நமக்குக் காசுக்குப் பஞ்சமேயிராது!" என்று கூறிவிட்டு, அவனுக்குத் தெரியாமல் அந்தக் காசுகளை ரகஸியமான ஒரு இடத்தில் புதைத்துவைப்பாராம். பிறகு தினம் கொஞ்சமாகத் தோண்டி எடுத்துச் செலவு செய்வாராம்!

இவ்வளவு குறும்பு மிக்க பையனாய் இருந்த நாகய்யாவின் குணங்கள் நாளடைவில் மாறிவிட்டன. பிறரை ஏமாற்றுவதிலும், அவர்கள் ஏமாறுவதிலும் அவர் ஆனந்தம் அடைந்ததெல்லாம், போய் அதற்கு மாறாக "தங்கமான பிள்ளை" என்று பெயர் வாங்க ஆரம்பித்துவிட்டார். இதற்கெல்லாம் காரணம் அவர் தகப்பனாரான ஸ்ரீ. வி. ஆர். சர்மாதான்.

ஸ்ரீ. சர்மாவின் நான்காவது குழந்தைதான் நாகய்யா. சித்தூரைச் சேர்ந்த அவர் 1907ம் வருஷம், ஏப்ரல் மாதம் 12-ந் தேதியன்று குண்டூர் ஜில்லாவிலுள்ள ரேப்பள்ளியில் பிறந்தார். அவருடன் பிறந்தவர்கள் ஐந்து சகோ

தரர்களும், மூன்று சகோதரிகளுமாவர். ஆனால் அவர்களில் ஒரு இளைய சகோதரரும் மூன்று சகோதரிகளும் மட்டுமே இப்பொழுது இருக்கிறார்கள். அவருடைய இளைய சகோதரர் ஒரு உபாத்தியாயராக இருந்து வருகிறார்.

நாகய்யாவின் அசல் பெயர் நாகேஸ்வரன் என்பதாகும். இந்தப் பெயரும் ஒரு காரணப் பெயராம். அவர் இரண்டு வயதுக் குழந்தையாய் இருந்த போது, அவரது தாயார் அவரைத் தொட்டிலில் விட்டுவிட்டு வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாராம். திரும்பி வந்து பார்த்த போது தொட்டிலில் குழந்தையின் பக்கத்தில் ஒரு பெரிய கருநாகம் படம் எடுத்து ஆடிக் கொண்டிருப்பதையும், குழந்தை அதன் படத்தைக் கையால் தட்டித் தட்டி சிரித்து விளையாடிக் கொண்டிருப்பதையும் கண்ட தாயார் திகில் அடைந்தாராம்.

[61-ம் பக்கம் பார்க்க]

வி. நாகய்யா

மோஹினியில் காதலனாய் விளங்கிய டி. எஸ் பாலய்யா, ஜூபிடர் வேலைக்காரி யுடன் இப்படி ஷோக்கான உடையில் தோன்றப் போகிறார்.

தண்ணீர் நிரம்பிய குடம் இடுப்பில் இருந்தால்தான் உடம்புக்கு ஆட்டம் ஏற்படும் என்பதில்லை. தண்ணீர் இல்லாத குடத்தை வைத்துக்கொண்டே டி. ஆர். ராஜகுமாரி ஹிந்தி சந்திரலேகாவில் அழகாக ஆடி வங்க சினிமா ரஸிகர்களின் மனதை வசீகரித்து வருகிறார்.

அஷோனா யோசனை

நாகர்கோயில்
மகாதேவன்...



பிரபல டைரெக்டர் ஒருவர் சம்பூர்ண ராமாயணத்தை தமிழ்ப் படமாக தயாரிக்க வேண்டு மென்று தீர்மானித்தார். அதற்காக நூற்றுக்கணக்கான நடிக நடிகையரை ஒப்பந்தம் செய்தார். நடிப்பு, சங்கீதப், ஆடை அலங்காரங்கள் முதலிய எல்லா வகையிலும் ராமயாணம் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய்களை வாறிவிசினார். இரண்டு வருஷ காலமாக ஒத்திகை நடத்தி எழுபத்தி மூன்று பாட்டுகளையும் ரிகார்டு செயதார். இவ்வளவும் செய்துவிட்டு ஷூட்டிங் ஆரம்பிக்கப் போகும் சமயத்தில், "பதிமூவாயிரம் அடிக்கு மேல படம் பிடிக்காதே" என்ற சர்க்கார் உத்திரவு வெளியாயிற்று. அதைப் பார்த்ததும் டைரெக்டருக்கும் கதை வசனம எழுதிய கந்தசாமிககும் கதிகலங்கி விட்டது. சுமார் அரைமணி நேரம் இருவரும் பிரமை பிடித்தவர்கள் போல உடகார்ந்திருந்தனா. கடைசியில் கநதசாமி, "ஏன் சார் இனிமேல் என்ன பண்றது?" என்று கேட்டான்.

"பண்றதென்ன? முப்பதினாயிரம் அடிகளாக நீங்கள் எழுதி வைத்திருக்கும ராமாயணத்தை பதிமூவாயிரம் அடியில் முடித்துவிட வேண்டியது தான்" என்றார் டைரெக்டர்.

"எப்படி?" என்று கேட்டார்.

"சொல்கிறேன், முதலில் நீங்கள் எழுதி யிருக்கும் ராமாபணத்தை வரிசைக் கிரமமாய் வாசியுங்கள். அதில் எந்தெந்தக் காக்ஷியை மாற்ற வேண்டு மென்பதை சொல்கிறேன். இப்படிச் செய்தால் பதிமூவாயிரம் அடியில ராமாயணத்தை முடித்து விடலாம்" என்றார் டைரெக்டா.

கந்தசாமி வாசிக்கத் தொடங்கினார்: "மந்தரி பிரதானிகள் புடைசூழ தசரத சக்ரவர்த்தி தர்பாரில் வீற்றிருக்கும் போது விஸ்வாமித்திரர் வந்து ராம லக்ஷ்மணர்களைத் தம்மோடு அனுப்ப வேண்டு மென்று கேட்கிறார். தசரதர் மறுக்கவே, முனிவர் கோபம் கொள்கிறார். உடனே தசரதர் சாமா ராகத்தில் "சாந்தமு லேகா சௌக்யமு லேது" என்று பாடி விட்டு ராம லக்ஷ்மணர்களை அனுப்புகிறார்."

டைரெக்டர் :—இந்தக் காக்ஷி பூராவையும் "கட்" செய்து விடுவோம.

கந்தசாமி :—ஐய்யய்யோ, "கட்" செய்தால் ஜனங்களுக்கு எப்படிப் புரியும ?

டைரெக்டர் :—எல்லாம் புரியும். பதிமூவாயிம் அடிப்படம் என்பது புரியாயலா இருக்கும்...... அப்புறம்.

கந்தசாமி:—விஸ்வாமித்திரரும ராம லக்ஷ்மணர்களும் போகும்போது

தாடகை குறுக்கிடுகிருள். அவளைக் கொல்லும்படி முனிவர் சொல்கிருர்.

"பெண்ணை எப்படிக் கொல்வது" என்று ராமர் யோசிக்கிருர். உடனே விஸ்வாமித்திரர் "பெண் இவளல்ல ராமா" என்று "பிலகரி" ராகத்தில் பாடுகிருர். அதைக் கேட்ட பின் ராமர் தாடகையை வதை செய்கிருர்.

டைரெக்டர்:—இதுவும் அனுவசியம். நமக்குத் தேவையில்லை. விஸ்வாமித்திரர் பாடி முடிக்கும் வரை தாடகை சும்மாயிருந்தாள் என்பதை நம்ப முடியவில்லை...... அப்புறம்......

கந்தசாமி:—அகலிகைக்கு சாப விமோசனம். அவள் எழுந்ததும், தன்யாசி ராகத்தில் "கருணை வள்ளலே" என்று பாடுகிருர்.

டைரெக்டர்:—வேண்டியதில்லை.

கந்தசாமி:—அப்படிச் சொல்லக் கூடாது. பாட்டை மாத்திரம் வைத்துக் கொள்ளுவோம்.

டைரெக்டர்:—அகலிகையே வேண்டாம் என்கிற போது பாட்டு எதற்கு?

கந்தசாமி:—இப்படிச் செய்தால் ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?

டைரெக்டர்:—இது பதிமூவாயிரம் அடிப்படம் என்று தான் நினைப்பார்கள்.

கந்தசாமி:—அப்புறம் ராமர் வில்லை ஒடித்து சீதையைக் கல்யாணம் செய்து கொள்கிருர்.

டைரெக்டர்:—வில் சமாச்சாரம் வேண்டியதில்லை. கல்யாணம் மட்டும் போதும்.

கந்தசாமி:—அப்படியானல் சீதை ராமரைப் பார்த்து "யாரோ இவர் யாரோ" என்று பாடும் பாட்டு......?

டைரெக்டர்:—வேண்டவே வேண்டாம்.

கந்தசாமி:—ஐயய்யோ. அந்தப் பாட்டு இல்லாவிட்டால் ஜனங்கள் ரொம்பவும் ஏமாந்துவிடுவார்கள்.

டைரெக்டர்:—ரேடியோவிலோ கிராமபோன் பிளேட்டிலோ கேட்டுத் திருப்தி அடைவார்கள்......

கந்தசாமி:—ராமருக்கு பட்டாபிஷேகம் செய்ய நினைக்கிருர் தசரதர். கூனி கைகேயியை கலைத்து ராமனைக் காட்டுக்கு அனுப்பும்படி செய்கிருள்.

டைரெக்டர்:—நமக்கு கூனி வேண்டியதில்லை. அவள் நடந்து வருவதற்கே பதிமூவாயிரம் அடியும் சரியாய் இருக்கும். கைகேயியே தசரதரிடம் சொன்னதாகவும், அதைக் கேட்டுவிட்டு ராமர் காட்டுக்குப் போனதாகவும், தசரதர் இறந்ததாகவும் மாற்றி விடுவோம்.

கந்தசாமி:—ரொம்ப சரி, அப்படியானல் தாத்தா வீட்டிற்குச் சென்றிருக்கும் பரதனை எப்படி "எக்ஸ்பிளாயிட்" பண்ணுவது?

டைரெக்டர்:—அவன் அயோத்தியிலேயே இருந்ததாகவும், எங்கேயோ விளையாடப் போயிருநதபோது இந்த சமாச்சாரங்கள் நடந்ததாதவும் வைத்துக் கொள்ளுவோம். மேலே வாசியும்.

கந்தசாமி:—ராமர் குகனை சந்திக்க......

டைரெக்டர்:—குகனை சந்திக்காவிட்டா லென்ன?

கந்தசாமி:—சந்தித்தால் தானே ஜனங்களுக்கு திருப்தி ஏற்படும்.

டைரெக்டர்:—வேண்டியதில்லை, இது பதிமூவாயிரம் அடிப் படம் என்று திருப்தி அடைந்தால் போதும்.

கந்தசாமி:—சூர்ப்பனகை வருகிருள்.

டைரெக்டர்:—அவள் எதற்காக வர வேண்டும்? ராவணனே வந்து சீதையைத் தூக்கிக் கொண்டு போனதாக இருக்கட்டுமே.

கந்தசாமி:—இருக்கட்டும்......அப்புறம் சீதையின் பிரிவினல் ராமர்

[தொடர்ச்சி 66-ம் பக்கத்தில்]

வேண்டியதைக் கேளுங்கள்

எஸ். பாபா (கொழும்பு)

என் நண்பர் ஒருவர் சினிமாவில் சேர வேண்டுமென்று புழுவாய்த் துடிக்கிறார்.

அட ராமா! சென்னையில் ஆயிரக் கணக்கான ஆண் எக்ஸ்ட்ராக்கள் புழுவுக்கும் கீழ்ப்பட்டவர்களாய் நடத்தப் படுகிறார்கள். அவர்களிலும் பெரும் பாலோர் வேலையின்றித் துடிக்கிறார்கள். இதெல்லாம் உம் நண்பருக்குத் தெரியாததால்தான் இந்தக் கோஷ்டியில் சேர வேண்டுமென்று துடிக்கிறார். துடிப்பதற்கு இலங்கையைவிட இந்தியா எந்த விதத்திலும் சிறந்ததாகத் தெரியவில்லை!

டி. சேகர் (சௌகார்பேட்டை)

பானுமதி நடித்த முதல் படம் எது? அவரது விலாஸம் தெரிவிக்கவும்.

பானுமதி நடித்த முதல் படம் "வரவிக்கிரயம்" (தெலுங்கு) ஆகும். அவரது விலாஸம்:— நெ. 11, வைத்திய ராமன் தெரு, சென்னை—17.

கே. மாரியப்பன் (புனா)

"அம்பிகாபதியில் ஹொன்னப்பா பாடுகிறார்" என்று நான் சொல்லுகிறேன். ஆனால்...

ஆனால், நான் இதுபோல அநேக வருஷங்களுக்கு முன்பே சொல்லி விட்டேனே!

பி. எம். பக்கிரி மஹமது (பினாங்கு)

என். ஸி. வஸந்த கோகிலம் தற்போது எந்தப் படத்திலாவது நடிக்கிறாரா?

அரவிந்த் புரொடக்ஷன்ஸார் தயாரிப்பதற்குத் திட்டம் போட்டிருக்கும் "காளிதாஸன்" படத்தில் டி. ஆர். மஹாலிங்கத்துடன் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார் அவர்.

மோஹனா (மைலாப்பூர்)

குமாரி ருக்மணியை ஒய். வி. ராவ் மணந்து கொண்டிருக்கிறாரா?

மணந்து கொண்டிருப்பதாக சிலர் நினைக்கிறார்கள்; சிலர் சொல்லுகிறார்கள்; சிலர் நம்புகிறார்கள்; சிலர் எழுதுகிறார்கள். இதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால், இது பற்றிய உண்மை மட்டும்தான் எனக்குத் தெரியாது!

கோவிந்தராஜ் (நாவலபிட்டிய, இலங்கை)

என் நண்பன் ஒரு சினிமா நடிகையை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்த விரும்புகிறான்.

அது இருக்கட்டும்; மணந்து கொண்டு வாழ்க்கை நடத்த விரும்பியிருந்தால் அநேக நடிகைகள் சினிமாவுக்கு வந்திருக்கவே மாட்டார்களே!

எம். ஆர். எம். காதர் (கொழும்பு)

சினிமாப் படங்களில் நாம் கேட்கும் ஒலியை எவ்வாறு பதிவு செய்கிறார்கள்? கிராமபோன் ரிகார்டுகள் மூலமா? அல்லது வேறு எந்த முறையில் செய்கிறார்கள்?

பேசும் படங்கள் தோன்றிய காலத்தில் கிராமபோன் இசைத் தட்டுகளே படத்தைப் பேச உதவின. ஆனால்

அம்முறை அப்பொழுதே கைவிடப்பட்டு விட்டது. இப்பொழுதெல்லாம் ஒலியை மின்சார சக்தி மூலம் ஒளியாக மாற்றி, உருவப் படத்தின் ஒரு ஒரத்தில் (பில்மிலேயே) பதிவு செய்து விடுகிறார்கள்.

“பட அபிமானி” (ஜம்மு, காஷ்மீர்)

“பில்மிந்தியா” பத்திரிகையைப் போல நீங்களும் கேள்வி கேட்கும் நேயர்களுக்குப் பரிசுகளை வழங்கினாலென்ன?

கூலி கொடுத்து நேயர்களைக் கேள்வி கேட்கச் செய்வது சுத்த முட்டாள் தனம் என்று எனக்குத் தோன்றுகிறது. கூலி கொடுக்காமல் கேட்பவர்களுக்கே பதில் சொல்ல முடியாமல் நான் திணறிக் கொண்டிருக்கிறேன் என்பது உமக்குத் தெரியாதுபோலும்?

ஜி. சக்ரவர்த்தி (தஞ்சாவூர்)

சினிமா நக்ஷத்திரங்களின் சம்பளங்கள் எல்லை மீறிப் போய்க்கொண்டிருக்கிறதே. இதைத் தடுக்க ஒரு சம்பள நிர்ணயக் கமிஷனை நியமித்தால் என்ன?

எல்லை தெரியாமல் எவ்வளவு வேண்டினாலும் பட முதலாளிகள் கொடுக்கத் தயாராயிருக்கும் போது நக்ஷத்திரங்களைச் சொல்வானேன்?

கே. எஸ். மணி (பெரம்பூர்)

நாட்டியம் ஆடும் லலிதா-பத்மினி இருவரும் உடன் பிறந்த சகோதரிகளா? அவர்களது சொந்த ஊர் எது?

உடன் பிறந்த சகோதரிகள்தாம். அவர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள்.

வி. முத்துகிருஷ்ணன் (திருச்சி)

பி. எஸ். கோவிந்தனின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

“91 மேல மாசி வீதி, மதுரை” என்று எழுதும்.

“தன் காதலைத் தெரிவிப்பதற்காக அவர் மனதை விட்டகற்றிய அந்தவெட்கம் உன்னைக் கவிந்து கொள்கிறதா; அம்மா?”—முருகன் டாக்கீஸாரின் “ரத்ன குமார்” தமிழ்ப் படத்தில் சின்னப்பாவும், பானுமதியும் தோன்றும் ஒரு காட்சி,

சென்னையில் மூன்று தியேட்டர்களில் அதி வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் "ஆதித்தன் கன"வில் இது ஒரு சந்தோஷகரமான காட்சி.

தாழ்வாக எழுதுவதற்கு லக்ஷ்மீகாந்தன் ஏதாவதுவிட்டு வைத்திருந்தாலல்லவா?

எம். குப்புசாமி (சென்னை)

ஜெமினி தயாரித்த முதல் படம் எது? அவர்களுக்கு அதிகப் பணத்தைச் சம்பாதித்துக் கொடுத்த படம் எது?

ஜெமினியின் முதல் படம் "மதன காம ராஜன்". பழைய படங்களில் "மங்கம்மா சபதம்" தான் அதிக வருமானத்தை அளித்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், "சந்திரலேகா" அதைக் கூடத் தோற்கடித்துவிடும் என்பது நிச்சயம்.

எம். ஜோஸப் பெர்னண்டோ (தூத்துக்குடி)

என் நண்பர் ஒருவர் சினிமாவில் சேரவேண்டுமென்று நீண்ட நாளாக அலைகிறார். அவரைத் தங்கள் போன்ற சினிமா அனுபவஸ்தர்கள் மூலம் சினிமாவில் சேர்க்க முடியும் என்று நினைக்கிறேன்.

நியாயம்தான். ஏமாற்றம் கூட புதுப் புது மாதிரியானதாய் இருந்தால்தானே சுவாரஸ்யம் குன்றுமலிருக்கும்!

பால்தேவதாஸ் (ஜம்மு, காஷ்மீர்)

சந்திரகாந்தாவில் சவுக்கடிப் புகழ் பெற்ற டி. ஆர். பி. ராவ் ஏன் தற்போது சினிமாவில் நடிப்பதில்லை?

அவரைச் சவுக்கடி யில்லாமலே சினிமா உலகம் வெளியேற்றி விட்டது சந்தோஷிக்கத் தக்கதல்லவா?

"முரளீதரன்" (சென்னை)

சக்ரதாரியில் நாகய்யா இரு கரங்களையும் ஒரே சமயத்தில் தாமே வெட்டிக் கொள்ளுகிறாரே? இது எப்படி சாத்தியம்?

சாத்தியமில்லைதான். இதையும் ஒரு "தந்திரக் காட்சி"யாகவே மதிக்கலாம்!

"சிங்கர் ஊசி" (புது டில்லி)

தாங்கள் நடிக நடிகைகளைப்பற்றி உயர்வாக எழுதக் காரணம் என்ன?

சகுந்தலா (கீழ்ப்பாக்கம்)

நடன ஆசிரியர் நடராஜ் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்.

அவர் படத்தில் நடிக்கவில்லை. தற்போது நடன ஆசிரியராக மட்டும் இருந்து வருகிறார்.

கே. வி. ஷண்முகம் (திருப்பாதிரிப்புலியூர்)

மோஹினியில் பாலய்யா கத்திச் சண்டை போடுவதாக ஒரு காட்சி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதே, அக்காட்சி ஏன் படத்தில் இல்லை?

அந்தக் கத்திச் சண்டை கத்திரிக்கோல் பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கும் என்று நீங்களே யூகித்துக் கொண்டிருக்கலாமே.

எஸ். அப்துல் ரஷீத் (சென்னை)

மோஹினியில் பாலய்யா பாடுவது அவரது சொந்தக் குரலிலா?

இரவல் குரல் வாங்கி யிருந்தால் பாட்டு இப்படியா யிருக்கும்!

என். ஆர். பத்மாவதி தேவி (நாகர்கோயில்)

எனக்கு நன்ருகப் பாடத் தெரியும். நடனம் ஆடவும் தெரியும். அலி பாபா படத்தில் நடித்து மிருக்கிறேன். ஆனல் அதன் பிறகு வேறு எந்தப் பட முதலாளியும் என்னைப் படத்தில் நடிக்க அழைக்க வில்லே, காரணம் என்ன?

பட முதலாளிகள் தாமாகவே அழைக்கும் வரையில் தாமாகத்தான் முயற்சிக்க வேண்டும். அவர்கள் தாமாக வருபவர்களை லக்ஷியம் செய்ய மாட்டார்கள் லக்ஷியம் செய்யாத நக்ஷத்திரங்களின் காலடியில் தாமாகச் சென்று தவம் கிடப்பார்கள்! இது நம் பட முதலாளிகளின் இயற்கைக் குணமாயிற்றே!

ந. ஆ. சூ. (மலாக்கா)

மற்றப் படங்களைவிட எம். வி. ராஜம்மா ஸிடேடல் ஞான செளந்தரியில் அழகாகத் தோற்றம் அளிக்கவும், நடிக்கவும் காரணம் என்ன?

மேக்கப் மேனின் திறமையையும், டைரெக்டரின் சிரத்தையையுமே முக்கியமாய் சொல்ல வேண்டும்.

என். பாலநரசிம்மன் (ஒடுவன்குறிச்சி)

கிரீன் பிக்சர்ஸின் நாத விஜயம் என்னவாயிற்று?

அதைப் பற்றிக் கொஞ்ச நஞ்சம் கேட்டுக் கொண்டிருந்த "நாதம்" கூட இப்பொழுது ஒய்ந்து விட்டது!

வி. சுப்ரமண்யம் (நெகமம்)

எஸ். டி. சுப்புலக்ஷ்மி சினிமா உலகிலிருந்து விலகி யிருப்பதன் காரணம் என்ன?

ஒருவர் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தால் சாகும் வரையில் நடித்துக்கொண்டே இருக்க வேண்டுமென்கிறீரா?

டி. சின்னராஜு (தேரூர்)

சந்திரலேகாவில் ராஜகுமாரிக்குப் பதில் பார் ஆடுவது யார்?

அப்படத்தில் நீங்கள் பார்க்கும் சர்க்கஸ் கம்பெனியைச் சேர்ந்த ஒரு நபர்.

எம். காமராஜன் (பெரியகுளம்)

சிறுகளத்தூர் சாமா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிருர்?

அவர் சொந்தத்தில் "ஸீதா பிக்சர்ஸ்" என்ற கம்பெனியை ஆரம்பித்திருக்கிருர். இக் கம்பெனி மூலம் அவர் ஒரு படத்தை வெளியிட முயன்று கொண்டிருக்கிருர் இப்பொழுது.

வி. ராஜநாயுடு (ஆம்பூர்)

போஜனில் வரலக்ஷ்மி பாடுவது அவரது சொந்தக் குரலிலா?

ஆம்; சொந்தக் குரலில்தான்.

வ. கி. ராஜேஸ்வரி (அம்பத்தூர்)

என் உடல் பருப்பதற்காக எவ்வளவோ தாதுபுஷ்டி மருந்துகளைச் சாப்பிட்டும் பயனேற்படவில்லே. ஆதலால் நான் சினிமாவில் சேர்ந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

சினிமாவில் சேர்ந்ததும் உமக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு மள மளவென்று நக்ஷத்திரப் பதவியையும், செல்வத்தையும், சந்தோஷத்தையும் அடைத்

"ஆண்டாளின் கனவு பலித்து விட்டது."
(ஸ்ரீ ஆண்டாளில் கோவிந்தனும் ஜீவரத்னமும்)

“மின்மினி”யில் நர்ஸாகத் தோன்றி கதாநாயகனின் மனதை மட்டுமன்றி நம் ரஸிகர்களின் மனதைக் கூடக் கவருவார் போலிருக்கிறது மேனகா.

நீரானல் ‘எந்த மருந்தாலும் உம்மை இளைக்கச் செய்ய முடியாதபடி’ பருத்துப் போவீர் என்பது உண்மையே. ஆனால் சினிமாவில் உமக்கு நடிப்பதற்குச் சந்தர்ப்பமே கிடைக்காமற் போனால் இப்பொழுதை விட இளைத்துத் துரும்பாய்ப் போய் விடுவீரே! அதைக் கவனித்தீரா?

ரஹீம் (ஆயப்பாடி)

பட முதலாளிகள் ஏன் ஆபாசம் நிறைந்த படங்களையே தயாரிக்கிறார்கள்?

பொது ஜனங்களாகிய நீங்களெல்லாம் அக்காட்சிகளைத்தானே விரும்புகிறீர்களாம்!

ஆர். மஹாராஜபிள்ளை (தாழக்குடி)

கே. எல். வி. வஸந்தாவின் நாய் சினிமாவில்கூட நடித்திருப்பதாய் எழுதியிருந்தீரே? அது எந்தப் படத்தில் நடித்திருக்கிறது?

தெலுங்கு (ஜெமினி) “பாலநாகம்மா” படத்தில் தோன்றும் கறுப்பு நாய் அது தான்.

என். ராம்கோபால் (தஞ்சாவூர்)

மோஹினியில் நடிக்கும் மாதுரி தேவியின் சொந்த ஊர் எது?

சென்னை.

கே. சுந்தரமஹாலிங்கம் (சத்திரப்பட்டி)

ஹாஸ்ய நடிகை அங்கமுத்து முதன் முதலில் நடித்த படம் எது? அவருக்கு வயதென்ன இருக்கும்? சொந்த ஊர் எது.

அவரது சொந்த ஊர் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள ஏதோ ஒரு கிராமம் என்று ஞாபகம். சுமார் முப்பத்தைந்து வயதான அவர் முதன் முதலில் நடித்த படம் நியூ தியேட்டர்ஸ் பல வருஷங்களுக்கு முன்பு வெளியிட்ட “நந்தனார்” ஆகும்.

வரதன் (மதுரை)

வி. என். ஜானகிக்குக் கலியாணம் ஆகிவிட்டதா? அவரது கணவன் பெயர் என்ன? அவரது விலாஸத்தைக் கண்டிப்பாய் தெரிவிக்கவும்.

அவரது விலாஸத்தைத் தெரிவிக்காவிட்டால் நீர் கண்டிப்பாய் உயிரை விட்டு விடுவீர் போல் காண்கிறதே! “நெ 1, சிங்கார நாயக்கன் தெரு, மந்தவெளி, மைலாப்பூர்” என்பது அவரது விலாஸம். பல படங்களில் உப பாகங்களில் தோன்றி வரும் கணபதி பட் தான் அவரது கணவர்.

பெரிய குண்டூசி ரங்கன் (மதுரை)

யோகம் மங்களம் சகோதரிகளில் ஒருவரான யோகத்தை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். அவர் சம்மதிக்காவிடில்......

சரி, சரி, நிறுத்தும். “உயிருள்ள யோகம் கிடைக்காவிடில் உமக்கு மரண யோகம் கிட்டும்” என்று சொல்லப் போகிறீர்! அவ்வளவு தானே?

அகராதி (திண்டுக்கல்)

குண்டூசியாரே! உமக்குப் போட்டியாக நான் “கோணி ஊசி” என்று

ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க நினைக்கிறேன். உம் அபிப்பிராயம் என்ன?

தாராளமாய் ஆரம்பியும். பதில் கிடைக்கப் பெருத அநேக நேயர்கள் புகார் செய்யும் போது என்ன சொல்வது என்று நான் விழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் உமக்கு இந்தக் கஷ்டம் இராது சட்டென்று ஒரு "சாக்கு"ச் சொல்லித் தப்பித்துக் கொண்டு விடலாம்!

ஸி. ஆறுமுகம் (கோவில்பட்டி)

ஏவி. எம். ஸ்டுடியோ சென்னைக்கே மாற்றப்பட்டு விட்டதா? அவர்கள் தற்போது எந்தப் படத்தைத் தயாரிக்கிருர்கள்?

காரைக்குடியி லிருந்த இந்த ஸ்டுடியோ சென்னைக்கே வந்து விட்டது. கோடம்பாக்கத்தில் இந்த ஸ்டுடியோ நிர்மாணம் ஆகி வருகிறது. அதோடு கூடவே அவர்கள் "வாழ்க்கை" என்ற ஒரு தமிழ் சமூகப் படத்தையும் உருவாக்கி வருகிருர்கள்.

கே. என். மல்லிநாதன் (கள்ளப்புலியூர்)

கங்கணத்தில் நடிக்கும் பசுபுலேட்டி லீலாவும், பிரபல நடிகை கண்ணும்பாவும் சகோதரிகளா?

இல்லை.

ஆர். எம். இக்பால் (நாகேஸ்வர நகர்)

எம். ஜி. ராமச்சந்திரன், பி. யு. சின்னப்பா, ரஞ்சன், கே. பி. கேசவன் ஆகியோரில் நடிப்பில் யாருக்கு முதல் ஸ்தானம்? யார் நன்ருகப் பாடக்கூடியவர்? சோக நடிப்பில்



கலியாண வயதான பெண்ணை வைத்துக்கொண்டு வரனுக்காக எத்தனை பெற்ருேர்கள் தவிக்கிருர்கள்? துளசி (புஷ்பவல்லி) தன் தகப்பனுரி (சுப்பையா பிள்ளை)டம் தன் தங்கைக்காகப் பார்த்து வந்திருக்கும் வரனைப் பற்றிக் கூறுவதை ஒன்றிக் கேட்டு நடந்தால் எத்தனை பெற்ருேர்களுடைய தவிப்பு நீங்கும்?

விஷயம் ஏதோ பெரியதுதான் போலிருக்கிறது. இல்லையானால் "ராஜகாந்தம்" இப்படி "பிழைக்கும் வழி"க்காக கையைப் பிசைந்து கொள்ளுவாரா?

திறமை உள்ளவர் யார்? கத்திச் சண்டையில் மிகத் தேர்ந்தவர் யார்?

நடிப்பிலும், பாட்டிலும் சின்னப்பாவுக்கே முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும். சோக நடிப்பில் கேசவனுக்கு நாடக மேடையில் நல்ல பெயர் இருந்தது. எம். ஜி. ராமச்சந்திரனையும், ரஞ்சனையும் கத்திச் சண்டை போடச் செய்தால் விஷயம் சரியாய்ப் புரிந்து விடும்!

வி. பி. மஹாலிங்கம் (பண்டாரவிளை, இலங்கை)

சந்திரலேகாவில் ராஜகுமாரியை ரஞ்சன் சவுக்கால் அடித்து ஆட வைக்கிறாரே? அவர் உண்மையாகவே அடிக்கிறாரா?

இன்னொரு படத்தில் ஒரு நடிகர் இறந்து விட்டதாக நடித்தால் அவர் உண்மையிலேயே இறந்து விட்டாரா என்று கேட்பீர் போலிருக்கிறதே!

ஏ. ஈ. ராமாநுஜம் (ஆற்காடு)

இது நிஜமாவில் நடித்துள்ள குமாரி என். ராஜம் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? அவர் எந்தெந்தப் படத்தில் நடித்திருக்கிறார்?

ஐயர் ஜாதியைச் சேர்ந்த இந்தக் குமாரி முதலில் "தன அமராவதி"யில் தோன்றினார். பிறகு தான் "இது நிஜமா"வில் நடித்தார். அவர் சமீபத்தில் வெளிவந்திருக்கும் "கிருஷ்ண பக்தி"யில் நிஜமாகத் தம் முகத்தைக் காட்டியிருக்கிறார் என்றால் நீங்கள் நம்பவே மாட்டீர்கள்!

எஸ். வரதராஜன் (திருநெல்வேலி)

சக்ரதாரியில் சூர்ய ப்ரபா பாடும் இரு பாட்டுகளும் அவராலேயே பாடப்பட்டவையா?

இல்லை; கல்பகம் என்பவரின் குரல் அது.

மாணிக்கம் (கொழும்பு)

"ஜகஜ் ஜனனீ சுகவாணி கல்யாணி" என்ற பாட்டை யார் எந்த சினிமாவில் பாடியிருக்கிறார்?

இது சினிமாப் பாட்டல்ல. தண்டபாணி தேசிகர் கச்சேரிகளில் பிரபலமடையச் செய்த இப்பாட்டு இசைத் தட்டிலும் வெளி வந்திருக்கிறது.

கே. ஏ. பத்மநாபன் (ஆலப்புழை)

எல்லா ஸ்டுடியோக்களைப் பற்றியும் செய்திகளை வெளியிடுகிறீர்களே. எங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஸ்டுடியோவைப்பற்றியோ அவர்கள் தயாரிக்கும் படத்தைப் பற்றியோ ஏன் எழுதுவதே யில்லை?

உங்கள் ஊருக்கு அருகாமையில் ஒரு ஸ்டுடியோ இருக்கும் விஷயமே நீர் சொல்லத்தான் தெரிகிறது! அந்த ஸ்டுடியோ விஷயத்தில் உமக்கு இருக்கும் அக்கறைகூட அந்த ஸ்டுடியோ நிர்வாகிகளுக்கு இல்லை. நானென்ன ஞானக்கண் படைத்தவனல்லவே?

எம். நடராஜன் (ஸ்ரீரங்கம்)

ஹொன்னப்ப பாகவதருக்கு காக்காய் வலிப்பு உண்டு என்று என் நண்பர் சொல்லுகிறார். இது உண்மையா?

உண்மைதான்; "ராஜ ராஜேஸ்வரி" படத்தில்தானே?

ரங்கன் (ஸ்ரீரங்கம்)

எங்கள் ஊருக்கு கொத்தமங்கலம் சுப்புவும், சுந்தரிபாயும் பெருமாளை சேவிக்க வந்திருந்தனர். இருவரும் சேர்ந்தே வந்ததால் நான் "அந்த முடிவிற்கு" வந்தேன். சரிதானே?

சரிதான்; இவ்வளவு காலத்திற்குப் பின் நீர் வந்திருக்கும் "இந்த முடிவிற்கு" அவர்கள் ரொம்பகாலத்திற்கு முன்பே வந்து விட்டார்கள்!

"சத்ரபதி" (பள்ளிபாளையம்)

முதன் முதலில் சினிமாவைக் கண்டுபிடித்தவர் யார்?

ஏன், அவருக்குத் தகுந்த தண்டனை விதிக்க வேண்டுமென்பது உம் எண்ணமோ!

ஸி. கிருஷ்ணமூர்த்தி (ஆம்பூர்)

எஸ். டி. சுப்புலக்ஷ்மியும், எம். கே. டி. பாகவதரும் பக்த மேதா படத்தில் சேர்ந்து நடிக்கப் போவதாய் விளம்பரம் செய்யப்பட்டதே? ஏன் நடிக்கவில்லை?

விளம்பரம் செய்கிற மாதிரியெல்லாம் நடந்து விடும் என்று சொல்ல முடியாது. அப்படியே நடந்திருக்குமானால் "சிந்தாமணி"யில் சிறுகளத்தூர் சாமா பில்வமங்களாக நடித்திருக்க வேண்டும். ஒய். வி. ராவ் "அசோக்குமாரி"ல் அசோகனாக நடித்து டைரெக்ட் செய்திருக்க வேண்டும். ஸக்ஸஸ் பிக்சர்ஸ் என்ற கம்பெனி "வேதாள உலக"த்தையும், டி. கே. புரடக்ஷன்ஸார் (கே. பி. எஸ்., லீலா தேசாய் ஆகியவர்களுடன்) "அருந்ததி"யையும் தயாரித்திருக்க வேண்டும். இன்னும் இது போல் எத்தனையோ!

ஒய். எம். எஸ். ரஷீத் (தென்காசி)

ஸெண்ட்ரல் ஸ்டுடியோ ஜுபிடரின் சொந்த ஸ்டுடியோவா?

இல்லை. அவர்கள் அதை குத்தகைக்கு எடுத்திருப்பதால் அவர்களது ஸ்வாதீனத்தில் இருக்கிறது அது.

'பெருமான் நல்லவர்தான். ராஜகாந்தத்திடமும் அவருக்குக் கோபம் இல்லை. இருந்தாலும் நாய் வேஷம் போட்டால் பொருத்தமாய் குலைப்பது தானே சிறந்த "பிழைக்கும் வழி?"

கா. மு. சாஹுல் (பேராதன, இலங்கை)

குமாரி கமலாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவருக்குக் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?

கமலாவுடன் பிறந்தவர்கள் இரு தங்கைகள் மட்டும்தான். அவர் கலியாண வயதை அடைந்து சில மாதங்கள் தானே ஆகின்றது. அதற்குள் அவசரப் படுகிறீரே?



சமீபத்தில் பட்டம் பெற்ற தம் குரு ஜி.டி. ராஜமாணிக்கம் பிள்ளையை கௌரவித்துத் தம்மையே கௌரவித்துக் கொண்டார் எம். எம். தண்டபாணி தேசிகர்.

வி. டி. விஸ்வலிங்கம் (பத்து ஆராங், மலாயா)

நம் நக்ஷத்திரங்களுக்கு "குயில், மயில்" என்பது போன்ற பட்டங்களைக் கொடுப்பதற்குப் பதில்காகப், எருமை, குண்டோதரி என்பது போன்ற பட்டங்களைக் கொடுத்தால் என்ன?

இப்படிக் கொடுத்தால் நம் சினிமா உலகத்தில் உண்மைக்கு அதிக இடம் ஏற்பட்டு விடுமே!

ய. கே. குமாரி (ஆலப்புழை)

சௌதாமினியின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

19, திருமலைப் பிள்ளை தெரு, ஸ்ரீனிவாஸபுரம், ராயப்பேட்டை, சென்னை என்பது அவரது விலாஸம்.

ஈ. ராஜாமணி (பம்பாய்)

சங்கீத டைரெக்டர்களுள் பெயர் போனவர் யார்?

யானை வைத்தியநாதய்யர் — அவருடைய பெயர் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை!

* * *

ஹாஸ்ய நடிப்பில் யார் சிறந்தவர்? என். எஸ். கிருஷ்ணனு, டி. எஸ். துரைராஜா?

என். எஸ். கிருஷ்ணன்தான்.

ஈ. எஸ். கிருஷ்ணன் (சிவகாசி)

என். எஸ். கிருஷ்ணன், பி. யு. சின்னப்பா, தியாகராஜ பாகவதர் இவர்களில் யார் அதிகப் படங்களில் நடித்திருக்கின்றனர்? இவர்களின் முதல் படம் எவை?

என். எஸ். கே. தான் அதிகப் படங்களில் நடித்திருக்கிறார். அவரது முதல் படம் "மேனகா". சின்னப்பாவின் முதல் படம் "சந்திர காந்தா". பாகவதரின் முதல் படம் "பவளக்கொடி."

என். எஸ். வி. (மண்ணச்ச நல்லூர்)

கே. பி. கேசவன் இது நாள் வரை சினிமாவில் நடிக்காமல் என்ன செய்து கொண்டிருந்தார்?

"அந்தக் காலத்தில் நாடக மேடையில் அசாத்தியமான புகழ் பெற்று, பிறகு சினிமாத் தேர்தலிலும் முதல் ஸ்தானம் பெற்ற 'நாம்' கேவலம் ஒரு உப நடிகராக நடிக்கலாமா வேண்டாமா?" என்ற பிரச்னையில் அவர் மூழ்கியிருந்திருக்கக் கூடும்!

ஜே. என். பெர்னண்டோ (கொழும்பு)

இப்பகுதியில் சினிமா சம்பந்தமில்லாத கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியுமா?

தமிழ்ப் படங்கள், அவை சம்பந்தப்பட்டவர்களைப் பற்றி மட்டுமே இங்கு பதில் அளிக்கப்படும்.

எம். ராஜமாணிக்கம் (தர்மபுரி)

தமிழில் ஏன் அதிகமாய் 'ஸ்டன்ட்' படங்கள் தயாரிப்பதில்லை?

பட விளம்பரங்களுக்கு கண்டு மீதி இருந்தாலல்லவா அந்த ஜகஜ்ஜாலங்களைப் படத்தில் காட்டுவதற்கு!

கிருஷ்ண பக்தியில் இது ஒரு பெரிய ராஜ தந்திரம்! ராஜகுமாரியை ராஜாவின் அபிமானத்திற்கு உட்படுப்படி ராஜகாந்தம் உபதேசம் செய்கிறார்.

"ஆதித்தன் கனவி"ன் வெற்றி
அஞ்சலிதேவியை அதிகமாய்
பிரபலப் படுத்தி வருகிறது.

'மோஹினி'யாகத் தோன்றி நம் மனதைக் கவர்ந்த ஜானகி ஜுபிடரின் 'வேலைக்காரி'யிலும் தோன்றுகிறார்.


பிழைக்கும்
வழி

சக்ரதாரி.

கிருஷ்ணபக்தி.

ரத்னகுமார்.



" அவ்வளவு பெரிய புஸ்தகத்தில் இவ்வளவு கடுமையான விஷயம் என்ன இருக்கிறதோ தெரியவில்லை !" நல்ல தம்பி'யில் என். எஸ். கிருஷ்ணன்.

"அடுத்தபடியாக வேலைக்காரியில் நடிக்கிறேன். உங்கள் தயவு எனக்கு அவசியம் வேண்டும்" என்று கே. ஆர். ராமசாமி கேட்கிறார் போலும்.

புடவை அழகாக இருப்பது போலவே
அதை உடுக்திக் கொண்டிருக்கும்
பானுமதியும் ரத்ன குமாரில்
அழகாக நடித்து வருகிருராம்.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

சரோஜா என்ற பெயருள்ள சிறுமியர் பலர் இப்பொழுது தமிழ் நாட்டில் இருப்பார்கள். அவர்களெல்லாம் அநேகமாக 1937ம் ஆண்டில் பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

* * *

'பாலயோகினி' என்ற தமிழ் சமூகப் படம் அந்த வருஷம்தான் திரையிடப்பட்டது. அதில் (அப்பொழுது பேபி) சரோஜாவின் நடிப்பைக் கண்டு மெச்சாதவர்கள் கிடையாது. அந்த வருஷத்தில் பிறந்த பல பெண் குழந்தைகளுக்கு அதன் பெற்றோர்கள் சரோஜா என்று பெயர் வைத்ததற்குக் காரணம் இதுவே!

* * *

இப்படியாக, பிரபலமான பல படங்களின் பெயர்களும், அதில் நடித்த பிரபல நக்ஷத்திரங்களின் பெயர்களும் அபிமானப் பெயர்களாகி விடுவது நமது நாட்டில் மட்டும் புதுமையல்ல. மேல் நாட்டில்கூட 'ஷேர்லி டெம்பிள்' என்ற பெயருள்ள சிறுமிகள் ஏராளமாய் இருக்கின்றனர்!

* * *

சமீபத்தில் நான் திருச்சிக்குப் போயிருந்த போது ஒரு ஹோட்டலுக்கு 'டிபன்' சாப்பிடப் போனேன். 'ஸர்வர்' தித்திப்புப் பக்ஷணங்களைப் பற்றி கட கடவென்று ஒரு 'லிஸ்ட்'டை சொல்லிக் கொண்டே வந்தான். அந்த 'அயிட்டங்'களில் சந்திரலேகாவும் ஒன்று!

“தியாக பூமி பார்டர்”, “மங்கம்மா சேலை”, “ராஜகுமாரி ஜாக்கெட்” இப்படியாக இந்த அபிமானப் பெயர்கள் காப்பி ஹோட்டல் முதல் ஜவுளிக் கடை உள்பட எங்கும் புகுந்து விடுகின்றன.

* * *

பிரபல நக்ஷத்திரம் 'ராஜகுமாரி'யின் பெயரில் ஜூபிடர் பிக்சர்ஸார் ஒரு படத்தைத் தயாரித்திருக்கின்றனர். நடிகைக்குக் கிடைத்துவரும் வெற்றி படத்திற்கும் கிடைத்ததில் ஆச்சரியமென்ன?

* * *

ஆந்திர நடிகையான புஷ்பவல்லி ஒரு முன்னணி நக்ஷத்திரம். ஆனல் புஷ்பவல்லி என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதாக, அம்பா பில்ம்ஸார் போட்ட திட்டம் அறிவிப்பு விளம்பரத்துடன் நிற்கிறது!

* * *

மேனகா என்ற ஒரு புதிய நக்ஷத்திரம் சினிமா வானில் சமீபத்தில்தான் தோன்றியுள்ளார். ஆனல் பல வருஷங்களுக்கு முன்பே மேனகா என்ற சமூகப் படம் வெளிவந்துவிட்டது!

* * *

“சகுந்தலா” என்ற படம் முன்பே இரண்டு வெளிவந்து விட்டனவே என்று எண்ணவேண்டாம். சகுந்தலா என்ற பெயருடைய நடிகைகள்

மூன்று பேர்களுக்கு மேலாகவே இருக்கிறார்கள்.

• • •

சின்னப்பா—சகுந்தலா ஒன்று. நடராஜ் – சகுந்தலா இரண்டு. இது தவிர ஜி. சகுந்தலா, என். ஆர். சகுந்தலா இப்படி நிறையப் பேர்கள்.

• • •

புத்ரி, குமாரி இரண்டிற்கும் ஒரே அர்த்தம்தான். இந்த வகையில் பார்த்தால் சூரியகுமாரியின் பெயரிலும் ஒரு படம் வெளிவந்திருக்கிறது எனலாம. "சூரிய புத்ரி" என்ற அப்படம் சூரியகுமாரிக்குக் கிடைத்து வரும் வெற்றியையேதான் கண்டது!

• • •

தமயந்தி என்ற பெயர் துரதிருஷ்டமான ஒரு பெயர் என்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் "தமயந்தி" என்ற படம் படுதோல்வி அடைந்தது போலவே நடிகை தமயந்தியும் சினிமா உலகில் அதிக பிரபலம் அடையாமல் இருப்பானேன்?

• • •

"மகாத்மா உதங்கர்" என்ற படத்தில் விஜயகுமாரி என்ற ஒரு புதிய நடிகை நடித்தது நமக்கு மறந்தேதான் போய் விட்டது. ஆனாலும் ஜூபிடர் பிக்சர்ஸார் "விஜயகுமாரி" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கப் போவதை அறியும் போதுதான் அந்தப் பெயரில் ஒரு நடிகை இருப்பது நமது ஞாபகத்திற்கு வருகிறது.

• • •

முதன் முதலில் அதிக காலம் ஓடிய படம் என்ற புகழ் "சிந்தாமணி" படத்திற்கு ஏற்பட்டது. அந்தப் படத்தின் வெற்றிதான் மதுரையில் "சிந்தாமணி" என்ற கொட்டகையை ஆரம்பித்து வைத்தது. சிந்தாமணி என்ற சிறுமிக்கும் அவள் நடித்த முதல் படத்திலேயே (மாடர்ன் தியேட்டர்ஸ் ஆதித்தன் கனவில் கீர்த்தி) சிந்தாமணி படத்திற்குக் கிடைத்த பெயரும், புகழும் கிடைத்து விட்டது. அபூர்வ சிந்தாமணிக்கும் அபார வெற்றி ஏற்பட்டிருக்கிறது.

• • •

"ஸ்ரீ ஆண்டாள் என்ற படம் தயாராகி சமீபத்தில்தான் திரையிடப்பட்டது. ஆனால் (எம். ஜே.) ஆண்டாள் என்ற ஒரு நடிகை ஏற்கனவேயே படங்களில் நடித்து விட்டார்.

• • •

ஜெமினியின் சந்திரலேகா படம் திரையிடப் படுவதற்கு முன்னமேயே சந்திரலேகா பில்ம்ஸ் என்ற படக் கம்பெனி பிறந்து விட்டது.

• • •

மாடர்ன் தியேட்டர்ஸார் "ராஜ ராஜேஸ்வரி" என்ற ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு, கண்ணாம்பாவின் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸ், காரணமாக இருந்தது என்று கூற முடியுமா?

• • •

அதே போலத்தான் வைஜயந்தி பில்ம்ஸ் விஷயமும். பிரபல நக்ஷத்திரம் வசுந்தரா தேவியின் பெண் வைஜயந்தி மாலாவின் பெயர்தான் வைஜயந்தி பில்ம்ஸ் என்ற நாமகரணத்துக்குக் காரணம் என்று சொல்ல முடியாது!

• • •

பாகவதர் என்றால் சினிமா வட்டாரங்களில் சாதாரணமாக தியாகராஜ பாகவதரையே குறிப்பிடும். ஆனால் பாகவதர் பிக்சர்ஸ் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கம்பெனியின் விஷயமோ, அவர்கள் தயாரிப்ப

தாக இருந்த 'நேதாஜி'யின் விஷயத்தைப் போலவே மர்மமாக இருந்து வருகிறது. இக் கம்பெனிக்கும் பாகவதருக்கும் ஸ்நானப்பிராப்தி கூடக் கிடையாது.

* * *

பாடகி ஒருத்தி, எழுத்தாளர் ஒருவர், இவர்களின் 'சுரபி' என்ற பெயரில் சினிமாக் கம்பெனி ஒன்று இருந்து வருகிறது.

* * *

நடிகை (டி. ஏ.) ஜெயலக்ஷ்மிக்கும், பட விநியோகக் கம்பெனியான ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸாருக்கும் சம்பந்தமே கிடையாது.

* * *

அப்படியானால் பாக்யா பிக்சர்ஸாருக்கும் நடிகை (எம். எஸ். எஸ்) பாக்யத்திற்கும் சம்பந்தம் உண்டா என்றால் அதுவும் கிடையாது! அவர்கள் படத்தில்கூட இந்த நடிகை நடிக்கவில்லை.

* * *

கிருஷ்ணா பிக்சர்ஸ் படங்களில் நடித்து வருகிறார் என்பதைத் தவிர, நடிகர் கிருஷ்ணனுடையதல்ல அந்தக் கம்பெனி.

* *

'காமதேனு' டால்டா வனஸ்பதி இப்பொழுது பிரபலமாக இருப்பது போல 'காமதேனு' என்ற படம் அந்தக் காலத்தில் (ஒரு விதத்தில்) பிரசித்தி பெற்றிருந்தது.

* *

'கல்கி' என்ற புனைப்பெயரில் ஒரு பிரபல எழுத்தாளரையும், அந்தப் புனைபெயரில் வெளி வரும் அவருடைய வாரப் பத்திரிகையையும் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் 'கல்கி' என்ற பெயரில் மன்னார்குடியில் ஒரு சினிமாக் கொட்டகை இருப்பது எவ்வளவு பேர்களுக்குத் தெரியுமோ!

* * *

“விஜயலக்ஷ்மி” என்ற பெயருடன் ஸ்டார் கம்பைன்ஸார் ஒரு படத்தைத் தயாரித்தார்கள். இப்பெயருடன் இருக்கும் தியேட்டர்களும் மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்த “சித்ரா”வின் பெயரில் இருக்கும் தியேட்டர்களும் மேற்கண்ட ஜாபிதாவில் சேர்ந்தவைதாம்!

* * *

சமீபத்தில் சென்னையில் ஒரு மஹாராஜா (சென்னை கவர்னர்) 'மஹாராணி' என்ற புதிய தியேட்டரை ஆரம்பித்து வைத்ததும், “மஹாராணி” என்ற பெயருடன் ஈஸ்வரி பிக்சர்ஸார் ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதும் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

* * *

அசோக்குமாரும், சந்திரமோஹனும் வட இந்தியாவில் பிரபல நடிகர்கள். அவர்களின் நாமகரணத்துடன் தமிழில் இரு படங்கள் வெளி வந்திருக்கின்றன.

“சக்ரதாரி”யில் இரண்டு வாயில்லாப் பிராணிகள்! அக்கா சொன்னபடியே கோராவை மணந்துகொள்கிறாள் அவளது தங்கை சாந்து (சூர்யப்ரபா).

★ பின் யோசனை !

'சினிமாக்களில் ஆபாசமான காட்சிகளை காட்டக் கூடாது என்று' ஒரு சட்டம் ஏற்கெனவேயே இருக்கிறது. அதோடு படங்களை பரிசிலிக்க சர்க்காரால் ஏற்படுத்தப் பட்ட தணிக்கை போர்டும் இருக்கிறது, இவைகளுக் கெல்லாம் 'டிமிக்கி' கொடுத்து விட்டு சில படங்கள் வெளிவந்து, சில மாத காலங்களுக்குப் பிறகு அப்படங்களைக் காட்டக்கூடாதென்று சர்க்கார் உத்திரவு போடுவதை பார்க்கும் போது ஆச்சரியப்படத்தான் வேண்டியிருக்கிறது. உதாரணமாக "ஜுகுனு" என்ற ஹிந்திப் படத்தை பம்பாய் சர்க்கார் இப்பொழுது தடை செய்திருக்கிறது. இப்படம் சென்னையில் பத்து வாரம் ஓடியிருக்கிறது. ஆனால் பம்பாய் சர்க்கார் தடை விதித்த பிறகே சென்னை சர்க்கார் தடை செய்திருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமாகத்தானே இருக்கிறது.

இப்படத்தில் ஆபாசமான காட்சிகளும் பொதுஜன நன்மைக்கு மாறான காட்சிகளும் இருப்பதாக பம்பாய் சர்க்கார் சொன்ன பிறகுதான் சென்னை சர்க்காருக்கும் தெரிந்திருக்கிறது. இதை சென்னை சர்க்காரும் தணிக்கை போர்டாரும் இதுகாறும் உணராது இருந்ததும் விந்தைதானே? அத்துடன் சென்னை சர்க்கார் இப்படத்தின் மீது இப்பொழுது தடை விதித்திருப்பதும் பம்பாய் சர்க்காரைப் பார்த்து 'ஈ அடிச்சான் காபி' செய்ததாகவே கூறத் தோன்றுகிறது. இந்நிலை மாறி வெளி மாகாணங்களிலிருந்து வரும் படங்களை முதலிலேயே பார்த்து ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இ. என். சுப்ரமணியம்,
கோயமுத்தூர்.

ஏன் கட்டக்கூடாது ?

நகர வாசிகளுக் கெல்லாம் சினிமாப் பார்த்துப் பார்த்து சலிப்பேற்பட்டிருக்கக் கூடும். இன்னும் ஏதாவது ஒரு புதுப்படம் வராதா என்று ஏங்கியும் இருப்பார்கள். ஆனால் கிராமத்திலே வாழும் குடியானவர்களாகிய எங்களுக்கு அப்படியில்லை. காலை முதல் மாலை வரை வேலை செய்து அலுத்துப் போகிறோம். அக்காலத்தில் எங்கள் அலுப்பைப் போக்க மது இருந்தது. அது இப்பொழுது போய் விட்டது. இந்நிலையில் கிராம வாசிகளாகிய நாங்கள் எங்கள் அலுப்பைப் போக்கிக் கொள்ள சினிமாவையே நாடுகிறோம். ஆனால் கிராமாந்தரங்களில் நிரந்தரமான தியேட்டர்கள் கிடையாது. எப்பொழுதாவது ஒரு டூரிங் டாக்கீஸ் வருகிறது. அதுவும் ஒரு மாதம் இருந்தால் அதிகம்.

கிராம வாசிகளாகிய எங்களுக்கு ஒரு நிரந்தர தியேட்டரை கட்டக்கூடாதா? நகரங்களில் போட்டி போட்டுக் கொண்டு பக்கம் பக்கமாக கொட்டகைகளை கட்டுபவர்கள் இரண்டு மூன்று கிராமங்களுக்கு மத்தியிலாவது ஒரு தியேட்டரைக் கட்டக் கூடாதா? அப்படிச் செய்வதால் அலுத்து வந்த ஆத்மாக்களை ஆறுதலடையச் செய்யலாமல்லவா? இதை நகர வாசிகளும் சர்க்காரும் உணர்ந்து எங்கள் குறைகளைப் போக்க முன் வருவார்களா ?

க. கோ. சிவா,
செங்கல்பட்டு.

மிகவும் அவசியம்

ரசிகர்கள் பலவிதம். அவர்களுள் சிலர் ஒரு அலாதி ரகத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு படத்தை அவர்கள் முன்பே பார்த்திருந்தால் போதும். அடுத்த முறை பார்க்கும்போது படம் ஆரம்பிக்க வேண்டியது தான் தாமதம்; வரப்போகும் சம்பவங்களை அழகாகவும் கோர்வையாகவும் வர்ணிப்பதில் அவர்களுக்கு ஒரு தனி உற்சாகம். இது தவிர வசனங்களைத் தாமும் கூடவே பேசுவதையும், பாட்டுக்களுடன் கூடவே தாமும் பாடுவதையும் அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். இதனால் ஏனைய ரஸிகர்கள் எவ்வளவு தூரம் சிரமம் அடைகின்ற

ணர் என்பதை அவர்கள் சிறிதும் உணர்வதில்லை. இதை அவர்களிடம் சொல்வதற்கும் முடியாது. சொன்னால் சண்டை வந்து விடும். ஆகவே அவர்கள் தங்களைத் தாங்களேதான் திருத்திக்கொள்ள வேண்டும். பிறர் நலனை உத்தேசித்தாவது அவர்கள் தங்கள் உற்சாகத்தை ஓரளவு அடக்கிக் கொண்டு கூடிய வரையில் அமரிக்கையாய் இருந்து படத்தைப் பார்ப்பது மிகவும் அவசியமாகும்.

டி. வி. வெங்கடராமன்,
சென்னை.

ஒரே ஒரு தியேட்டர்

பம்பாய் நகரில் தமிழர்கள் பெரும்பாலும் வசித்து வரும் இடம் மாதுங்கா. ஆயிரக்கணக்கான தமிழர்கள் வசிக்கும் இவ்விடத்தில் அவர்களுக்கென்று ஒரு சினிமாக் கொட்டகைகூட இல்லை. மாற்றாந்தாய் பிள்ளையைப் பார்ப்பது போல் இவர்களுக்கு வாரத்தில் ஒரு காட்சி இரண்டு காட்சிகள் என்று ஒரு தமிழ்ப் படம் (சனி, ஞாயிறு காலை வேளைகளில் யாரோபுண்ணியவான்களால்) திரையிடப் படுகிறது. தமிழ்ப்படம் என்றவுடன் காணாது கண்டவர்கள் போல் அனைவரும் திரண்டு வந்து விடுகின்றனர். இதனால் "கள்ள மார்க்கெட்" தலைவிரித்தாடுகிறது. பலர் டிக்கெட் கிடைக்காமல் வீடு திரும்பவும் நேரிடுகிறது.

தமிழ் நாட்டில் பல இடங்களில் ஹிந்திப் படங்களுக்குத் தனி தியேட்டர்கள் இல்லையா? ஏன் அதைப்போல் மாதுங்காவில் தமிழ்ப் படங்களுக்காக ஒரு தியேட்டராவது இருக்கக் கூடாது? இங்குள்ள தியேட்டர் காரர்கள் கொடுக்க மறுத்தால் தமிழ்ப் படங்களைத் தயாரிக்கும் முதலாளிகள் பலர் கூடியாவது, ஒருவரேயாவது ஒரு தியேட்டரை இங்கு ஏன் நிர்மாணிக்கக் கூடாது? இப்படிச் செய்வதால் தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டு செய்த பலன் கிடைக்குமல்லவா? இதைத் தமிழ் நாட்டார் உணர்ந்து ஆவன செய்வார்கள் என்று பூர்ணமாக நம்புகிறேன்.

ராஜாமணி,
பம்பாய்.

*பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர் :

இ. என். சுப்ரமண்யம்,
22/34, ராஜவீதி,
கோயமுத்தூர்.

தணிக்கைபோர்டு கவனிக்குமா?

தற்காலம் ஆங்கிலப் படங்கள் உள்ள நிலைமையைக் காணும்போது அழுவதா சிரிப்பதா என்றே தோன்றவில்லை. இந்த நிலை ஏற்பட்டதற்கு சென்னை மாகாணத்தில் மதுவிலக்கு ஏற்பட்டதே காரணமாகும்.

சமீபத்தில் நான் இரண்டு படங்களில் வந்த காட்சிகளையே இதற்கு உதாரணமாகக் கூறுகிறேன். ஒரு படத்தில் கதாநாயகன் குடித்துக் குடித்து கெட்டு விடுவதாகக் கதை. இப்படத்தில் கதாநாயகன் குடிக்க கிளாஸைக் கையில் எடுக்கிறான். மறு காட்சியில் அவன் கிளாஸைக் கீழே வைத்து விடுகிறான். கிளாஸில் இருந்த மது என்ன ஆயிற்று என்று காட்டப்படுவதில்லை. மேலும் கிளாஸை எடுப்பதும் வைப்பதும் சட்சட்டென்று வருகிறது. இதனால் படம் பார்ப்பவர்களுக்கு ஒன்றுமே விளங்குவதில்லை.

மற்றொரு படத்தில் பல இடங்களில் படம் தாவுகிறது. இது எதனால் என்று படத் தொழிலில் நல்ல அனுபவமுள்ள ஒருவரைக் கேட்டேன். அப்படத்தில் ஏதோ ஆபாசமான காட்சிகள் இருந்ததாகவும் அதைத் தணிக்கை போர்டார் கத்தரித்து விட்டதாகவும் கூறினார். இப்படிச் செய்வதால் படத்தின் ரஸனையே போய் விடுகிறது.

படங்களை வீணாகக் கத்தரித்து, கதையின் போக்கை மக்கள் அறிந்து கொள்ள முடியாமல் செய்வதை விட, அம்மாதிரி படங்களையே காட்டக் கூடாதென்று தணிக்கை போர்டார் ஏன் உத்திரவு போடக்கூடாது? அப்படிச் செய்தால் பொது ஜனங்களுக்கு நன்மையாய் இருக்கும் அல்லவா?

சிவம்,
பெங்களூர்.

சபாஷ் "பாலஸ்!"

இராஜபாளையம் "சண்முக விலாஸ் சினிமா பாலஸ்" என்ற தலைப்புடன் செப்டம்பர் ஊசியில் மேற்கண்ட தியேட்டரிலுள்ள அனேகக் குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தது.

இத் தியேட்டரின் நிர்வாகிகள் தங்களுடைய தியேட்டரிலுள்ள குறைகளையும், பொது ஜனங்களின் சௌகரியங்களையும் இப்பொழுது உணர்ந்து, உடனே அக்குறைகளை நிவர்த்தி செய்து விட்டனர்! இப்போது இத்தியேட்டரில் பல புதிய வசதிகளுடனும், பொது ஜனங்களின் அமோகமான ஆதரவுடனும், புதிய படங்களைக் காட்டி வருகிறார்கள்!

இம்மாதிரியாக ஒரு கடிதம் பிரசுரித்ததின் பயனாய் தங்களுடைய தியேட்டரின் குறைகளை நிவர்த்தி செய்த "சண்முக விலாஸ் சினிமா பாலஸி"ன் முதலாளிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இத் தியேட்டர் நிர்வாகிகள் இதே போல் பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து நல்ல நல்ல படங்களைக் காட்ட வேண்டும். இத்தியேட்டர் நிர்வாகிகளை மற்ற ஊர் தியேட்டர் நிர்வாகிகள் பின்பற்றி, அவர்களும் தங்கள் தியேட்டர்களில் பொதுஜன நன்மைக்கேற்ற சௌகரியங்களை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

என். எஸ். என். சாமி,

இராஜபாளையம்.

சர்க்கார் கவனிக்குமா?

சென்னை நகரில் இரவு 10 மணிக்கு மேல் பஸ் கிடையாது. சில பாதைகளில் மட்டும் இரவு 12 மணி வரை ஓடுகிறது. நகரில் கடைசி சினிமாக் காட்சி முடிவது இரவு 12 மணிக்கு மேல்தான். அந்தக் காலத்தில் பஸ் போக்கு வரவு கிடையாததால் ரஸிகர்கள் வீடு திரும்புவது மிகவும் சிரமமாகிறது. பணம் படைத்தவர்கள் 'டாக்ஸி' 'ஜட்கா' 'ரிக்ஷா' போன்ற சாதனங்கள் மூலம் வீடு திரும்புகின்றனர். நடுத்தர வகுப்பினர் நடந்து வீடு திரும்ப வேண்டியதாகின்றது. நடந்து வருவதால், வழியில் நகர காவலரின் நியாயமான எச்சரிப்புக்கும், நடப்பதால் ஏற்படும் கால் கடுப்பிற்கும் ஆளாகவேண்டி இருக்கிறது.

எனவே தான் பெரும்பாலான மக்கள் 'மாடினி' அல்லது 6 மணி காட்சிக்கே சென்று வருகின்றனர். தொழிலாளர்கள் 'மாடினி' அல்லது இரண்டாங் காட்சிக்குச் செல்வது முடியாத காரியம். எனவே அவர்கள் இராக் காட்சியைக் காண விரைகின்றனர். ஆனால் வீடு திரும்புவதற்கு மேற் சொன்ன கஷ்டம் ஏற்படுகிறது.

இரவுக் காட்சி முடிந்தவுடன் சர்க்கார் ஒவ்வொரு பாதையிலும் குறைந்த அளவு ஒரு பஸ்ஸாவது செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த அகால வேளையில் மட்டும் கட்டணத்தை வேண்டுமானால் கொஞ்சம் உயர்த்தலாம். அத்துடன் நபர்களையும் கொஞ்சம் கூடுதலாக ஏற்றிச் செல்லவும் அனுமதிக்கலாம்.

இதை சர்க்கார் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்

பாதசாரி,

மாத்தூர்.

சிந்திப்பார்களா?

தற்போது தமிழ் சினிமா எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆனாலும் பெரும்பாலான படங்களில் மேக்-அப், உடைகள் முதலிய அம்சங்கள் திருப்தி அளிப்பதாக இல்லை. கதை எந்தக் காலத்தியதோ, எந்த இடத்தில் நடந்ததோ, அந்தக் காலம், இடம் ஆகியவற்றிற்குப் பொருத்தமான மேக்-அப், உடைகள் போன்றவை தமிழ்ப் படங்களில் காணப்படுவதில்லை. ஆனால், மேல் நாட்டுப் படங்களிலோ, மேக்-அப், உடைகள் ஆகியவற்றில் அவர்கள் விசேஷ கவனம் செலுத்துகின்றனர். 'அராபியன் நைட்ஸ்' என்ற படத்தைப் பார்க்கும்போது, அராபியர்களை நேரிலேயே காண்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. 'குட் எர்த்' என்ற படத்தில் சைனாக்காரனாக வரும் பால் முனி அசல் சைனாக்காரனாகவே காட்சி அளிக்கிறார். நம் நாட்டில் புராணம் சமூகம் எதாயிருந்தாலும் சரி, நடிகர்கள் தங்கள் சுய தோற்றத்திலேயே காட்சி அளிக்கின்றனர். எந்தக் காலத்துக் கதையானாலும் அவர்களுக்கு அக்கரை இல்லை. நடிகர்களை அழகுபட அலங்கரித்து விடுகின்றனர். இதனால் நம் கலாசாரம் கெட்டு விடுவதுடன் கதையின் தன்மையும் கெடுகிறது. இதைப்பற்றி படத் தயாரிப்பாளர்களோ, மேக்-அப் உடை அலங்காரம் செய்பவரோ சிந்திப்பதாகவே தோன்றவில்லை. மேக்-அப், உடைகள் ஆகியவற்றில் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் கொஞ்சம் சிந்தனையைச் செலுத்தினால் தமிழ்ப் படங்களின் தரம் இன்னும் அதிகமாக உயரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இதை படத் தயாரிப்பாளர்களும், மேக்-அப் செய்பவர்களும் உணர்ந்து அதன்படி நடப்பார்களென்று நம்புகிறேன்.

எஸ். தியாகராஜன்,

கோயமுத்தூர்.

வாஸன் புகழ் வடக்கே பாய்கிறது

ஹிந்தி சந்திரலேகா—ஒரு வெற்றியின் வெற்றி

சமீப காலமாக, நம் பட முதலாளி களில் சிலர், சில ஹிந்திப் படங் களுக்கு தமிழ் வசனங்களைச் சேர்த் துத் தமிழ்ப்படங்களாகத்தயாரிப்பதில் முனைந்திருப்பதைக் கண்ட நான் மிக வும் வருந்தினதுண்டு. காரணம், ஏற் கனவே அசாதாரணமான மந்த நிலை யில் இருந்துவரும் நமது தமிழ்ப் பட "மார்க்கெட்" இவர்களது இந்தச் செய்கையினால் மேலும் மோசமாகி விடக்கூடும் என்பதால்தான். அதே சமயம், "ஏன் நம் பட முதலாளிகள் சிறந்த தமிழ்ப் படங்களை ஹிந்தியில் தயாரித்து வடநாட்டில் திரையிடக் கூடாது" என்று தோன்றியது. எனவே, ஸ்ரீ. வாஸன் சந்திரலேகா வை ஹிந்தி சம்பாஷணைகளுடன் தயாரிப்பதை அறிந்து மகிழ்ச்சி யடைந்தேன். படத்தைப் பார்த்தபின் "வாஸனுக்கு ஜே" என்று வாய்விட் டுக் கூவத் தோன்றுகிறது. "வாஸன் வெற்றி தெய்வத்தை வசப்படுத்தி வைத்திருக்கிறார். ஆதலால், அவர் எடுத்துக் கொண்ட காரியம் எதிலும் அவருக்கு மகத்தான வெற்றியே ஏற் படுகிறது" என்று கூறினால் பொருத் தமாகவே இருக்கும். தமிழ் சந்திர லேகா வாஸனுக்கு தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும், இலங்கையிலும் மகத் தான புகழை ஏற்படுத்தியது. ஹிந்தி சந்திரலேகாவோ அவருக்கு மகோன்னத அகில இந்தியப் புக ழைச் சம்பாதித்துக் கொடுக்க ஆரம் பித்திருக்கிறது.

படத்தின் தரத்தைப்பற்றி மீண்டும் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. சிறந்த இத் தமிழ்ப் படத்தை மேலும் சிறப்புடன் ஹிந்தியில் தயா ரித்திருக்கிறார்கள் என்றாலே போதும். தமிழ்ப் படத்திற்கும் ஹிந்திப் படத் திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை களை மட்டும் நாம் கவனித்தால் போது மானது.

கதை: அதே கதைதான். கிருஷ் ணன், மதுரம், சுந்தரிபாய் மூவரும் கோட்டை வாயிலில் தோன்றுவது, கடையாணியைப் பிடுங்கிக் கொண்டு மதுரம் ஓடுவது ஆகிய காட்சிகள் ஹிந்திப் படத்தில் நீக்கப் பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. சுந்தரிபாய் மட் டுமே வைக்கோல் வண்டிக்குள் ஒளிந்து கொண்டு கோட்டைக்குள் செல்வதாக மாற்றி யிருக்கிறார்கள். அரண்மனைக்குள் நுழைவதற்காக சுந்தரிபாய் காவலாளிகளை ஏமாற் றும் ஒரு காட்சி புதிதாக சேர்க்கப் பட்டுள்ளது. கதையின் கோர்வை பாதிக்கப்படாத முறையில் இந்த மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

நடிகர்கள்: ஹிந்திப் படத்தில் கிருஷ்ணன்—மதுரம் இவர்கள் கிடை யாது. கரடி வேஷத்தில் கிருஷ்ணன் வந்து அட்டஹாஸம் செய்யும் சமயம் உண்மையை மதுரம் தெரிந்து கொள் வதாக உள்ள காட்சி மட்டுமே இருக் கிறது. அந்தக் காட்சியிலும் மதுரத் திற்கு பதில யசோதரா கட்ஜு என்ற வட இந்திய நடிகையும், கிருஷ்ண னுக்குப் பதில் மொக்குவாக வரும் 'பொட்டை' கிருஷ்ணமூர்த்தியும்

நடிக்கின்றனர். இக்காட்சிகள் சுவை குன்றாது சுவாரஸ்யமாகவே உள்ளன.

பாட்டுகள்: தமிழ்ப் படத்தில், தந்தையை இழந்த ராஜகுமாரி ஒரு பாட்டுப் பாடுகிறார். அந்த சந்தர்ப்பத்தில் பாடுவது அசம்பாவிதமே. அதை உணர்ந்து தான் என்று நினைக்கிறேன்; அந்தப் பாட்டு ஹிந்திப்படத்திலிருந்து நீக்கப் பட்டிருக் கிறது. மற்றபடி தமிழ்ப் படத்தி லுள்ள எல்லாப் பாட்டுகளும் ஹிந்தியில் மாற்றப்பட்டு சிறப்பாய் அமைந் திருக்கின்றன. தமிழ்ப் படத்தில் இல்லாத பாட்டு ஒன்றும் புதிதாய் சேர்க்கப்பட்டுள்ளது. சுந்தரிபாய் அரண்மனைக் காவல் காரர்களை ஏமாற்ற (ஆடும் ஆட்டத்திற்கு) பாடும் அந்தப் பாட்டும், (நாட்டியக் குதிரை) 'நாட்டிய கோடா' பாட்டும் வடநாட்டில் பிரமாதமாகப் புகழப்படும் என்றே நினைக்கிறேன்.

தற்போது மதுரையில் நாடகங்களை நடத்திவரும் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை சமீபத்தில் தம் கம்பெனியின் பதினாறுவது ஆண்டு விழாவை வெகு சிறப்பாக நடத்தினர்.

சிறப்பான அம்சங்கள்: தமிழ்ப் படத்தில் வசனங்கள் நன்கு அமையவில்லை என்ற குறை இருந்தது. ஆனால் ஹிந்தியில் வசனங்கள் வெகு சிறப்பாக அமைந்துள்ளன என்பதை ஹிந்தி நன்ருகப் படித்தவர்கள் கூறுகிறார்கள்.

மற்றொரு விசேஷ அம்சம் படத்தின் நீளக்குறைவு. தமிழில் 18,634 அடிகளில் இருந்த இப் பெரிய படத்தை அநாவசியமான பாகங்களை நீக்கி விட்டு 14,495 அடிகளில் ஹிந்தியில் தயாரித்திருக்கிறார்கள். நீளம் குறைக்கப் பட்டதால் படத்தில் முன்னைவிட அதிக விறுவிறுப்பு ஏற்பட்டிருப்பது கவனிக்கதக்கது.

பாட்டுகள், வசனங்கள் இவைகளை மிகவும் கவனத்துடன், வாய் அசைப்புகள் இம்மியும் பிசகாது அமைத்து சேர்த்திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும்தகும். சில காட்சிகளை மீண்டும் எடுத்திருக்கிறார்கள். மொத்தத்தில், சந்திரலேகா தமிழ்ப் படத்தைப் பார்க்காதவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால் ஹிந்தியில் தனியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு படம் என்றே நினைப்பார்கள்.

சென்ற வருஷம் மார்ச் மாத 'குண்டூசி'யில் (தமிழ்) சந்திரலேகா திரையிடப்படுவதற்கு முன், அந்தப் படத்தைப்பற்றி, ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதன் முடிவில் "ஸ்ரீ. எஸ். எஸ். வாசனை தமிழ் நாட்டின் ஸிஸில் பி. டி. மில்லி என்று கூறலாம்" என்று குறிப்பிட்டேன். இப்பொழுதோ வடநாட்டவரும் சேர்ந்து, "ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் இந்தியாவின் ஸிஸில். பி. டி. மில்லி" என்று வாயாரப் புகழப் போகிறார்கள் என்பது நிச்சயம்.

—"சிவம்"

நல்லதம்பி

திரைக் கதை

நல்லதம்பி பால்யத்திலேயே ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தவன். கிராம முன்னேற்றமே தேச சேவையில் முக்கியமென்று கூறிய உலகம் போற்றும் உத்தமர்களின் உபதேசங்களைக் கடைப்பிடித்து அதன்படி நடக்கத் தலைப்படுகிறான். தனது வாழ்க்கையை கிராம மக்களுக்குச் சேவை செய்வதிலேயே அர்பணித்துக் கொள்கிறான்.

நல்ல தம்பியின் மாமா சொப்பன புரி ஜமீந்தார். அவர் தமது அந்திய காலத்தில் தமது தங்கையின் மகனான நல்லதம்பிக்கும், தமது மகள் புஷ்பாவுக்குமாக தம் ஜமீனின் பாத்தியதையை சாசனம் எழுதி வைக்கிறான். அதே ஜமீன்தாரின் பாத்தியதைக்காரனான பூபதி, புஷ்பாவும் ஜமீனும் தனக்கே கிடைக்கப்போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் ஜமீன்தாரின் அந்திய கால சாசனம் அதை ஏமாற்றி விட்டது. இதனால் தனது ஆடம்பர வாழ்க்கைக்கு பங்கம் விளையும் என்று கலக்கமடைகிறான். நல்ல தம்பியின் மீது பொய்ப் புகார்களை புஷ்பாவிடம் சொல்லி, அவனை ஜமீன் பதவியிலிருந்து ஒழித்து விட பலவித சூழ்ச்சிகளைச் செய்கிறான்.

அன்டோனியோ—கிருஷ்ணன்

சரோஜா—ராஜகுமாரி

கிளியோ பாட்ரா—பானுமதி

ஆனால் ஜமீன் பதவி நல்லதம்பிக்குக் கிடைத்தது பற்றி கிராமத்து ஜனங்கள் அளவிலா ஆனந்தமடைகின்றனர். பதவி கிடைத்தவுடன் பொறுப்பேற்ற நல்ல தம்பி ஜமீனில் நடந்து வரும் அட்டூழியங்களை நேரில் காண நேரிடுகிறது. அவைகளை ஒழிப்பது எப்படி; உழைப்பாளிகளான கிராம வாசிகளின் பெருமையை எப்படி எடுத்துச் சொல்லி அதற்குப் பரிகாரம் செய்வது என்பவற்றிற்காக ஒரு திட்டத்தைத் தயாரிக்கிறான் நல்ல தம்பி. இத்திட்டம் ஆசை வெறி பிடித்த ஆர்பாட்டக்காரர்களுக்கு அதிர்ச்சியை உண்டு பண்ணுகிறது.

இதனால் நல்ல தம்பிக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. அவனது வாழ்க்கையின் லட்சியமான கிராம சேவையும் தடைப்படுகிறது. இவைகளை யெல்லாம் நல்ல தம்பியின்

காந்தி பக்தர்—கிருஷ்ணன்



வில்லன்—சஹஸ்ரநாமம்

தோழியும், அதே ஜமீனின் ஒரு மிராசுதாரரின் மகளுமான ராணி தடுத்து வருகிருள். அவள் மூலமாகவே நல்லதம்பி கிராம சேவையையும், மக்களுக்குத் தேவையான உதவியையும் செய்து வருகிருன். தோழி ராணியை தன் ஜமீனில் டைபிஸ்டாகவும் நல்லதம்பி நியமிக்கிருன்.

நல்லதம்பியும், ராணியும் இரகசியமாகச் செய்து வரும் காரியங்கள் புஷ்பாவுக்குத் தெரிகிறது. முன்பே பூபதி நல்லதம்பியின் மீது சொல்லியுள்ளவைகள் அப்பொழுது புஷ்பாவுக்குப் பொன் மொழிகளாகின்றன. நல்லதம்பிமீது சந்தேகம் அதிகரிக்கிறது. இச்சந்தர்ப்பத்தைத்தான் பூபதி எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சந்தர்ப்பம் கிடைத்ததும் பூபதி புஷ்பாவைத் தன் வலைக்குள் இழுத்துக் கொள்கிருன். புஷ்பாவும் அவன் கைப்பாவை

மிராசுதார்—குப்புசாமி

ராணி-மதுரம்

யாக மாறி, அவன் சொல்வது போல வெல்லாம் ஆடத் தலைப்படுகிருள்.

நல்ல தம்பி திட்டப்படி கிராமத்தில் இருந்து வந்த பழைய முறைகளை ஒழிக்கிருன். கூட்டுப் பண்ணையை ஏற்படுத்துகிருன். இதனல் நல்ல தம்பியின் கீர்த்தி மேலும் ஒருபடி உயருகிறது. கிராமத்து ஜனங்களின் நன்மதிப்பு அவனுக்கு முன்னிலும் பன்மடங்காகப் பெருகுகிறது.

புஷ்பாவும், பூபதியும் நல்லதம்பியின் இந்த செல்வாக்கைக் கண்டு ஆத்திரமடைகின்றனர். இதைத் தவிர்ப்பது எப்படி என்று சிந்திக்கின்றனர். கடைசியாக 'நல்லதம்பிக்குப் புத்தி சுவாதீனம் இல்லை; அவனுக்கு இப்பதவி வகிக்க யோக்கியதை கிடையாது' என்று சட்ட நிபுணர்கள் உதவி கொண்டு நல்லதம்பி மீது வழக்குத் தொடருகின்றனர்.

அறிவுள்ளவனை [சித்த சுவாதீன மற்றவன் என்று சொல்லும் அறிவிலிகளின் ஆர்ப்பாட்டம் ஒரு புறம்; மதியுள்ளவனை மதியில்லாதவன் என்று மன்றத்திலேற்றி வைப்பது மற்ருெரு புறம்; அதைக் கண்டு மருட்சி கொண்ட மக்களின் கூக்குரல் இன்னெருபுறம்! இதன் மத்தியில் நீதிபதியின் உயிர் ஊசலாடுகிறது. கடைசியாக உண்மை வெல்கிறது. பொய் புகைந்து போகிறது. கபட நாடகதாரிகளான புஷ்பாவும், பூபதியும் தோல்வியால் வெட்கித் தலை குனிகிருர்கள். மக்களின் நன்மதிப்பையும், நீதியின்நேர்மையையும்கடைப்பிடித்த நல்லதம்பியும், ராணியும் எப்பொழுதும் போல் கங்கள் சேவையில் ஈடுபட்டு மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

பட்டமளிப்பு விழா

நாட்டிய வித்வான் ஸ்ரீ. வழுவூர் ராமையா பிள்ளைக்கு 'நாட்டிய கலா கேஸரி' என்ற பட்டத்தை அளிக்க இம்மாதம் 20-ம் தேதி ஒரு விழா நடைபெற்றது. காங்கிரஸ் கண்காட்சி மைதானத்தில் டாக்டர் சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பிரதம நீதிபதி கனம் பி. வி. ராஜமன்னர் பட்டத்தை வழங்கினர். 'கல்கி', கே. சுப்ரமண்யம், மற்றும் சிலர் பரத நாட்டியத்தின் உயர்வையும், ராமையா பிள்ளையின் திறமையையும் புகழ்ந்து பேசினர்கள்.

உதவி நாடகம்

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் புஸ்தக சாலைக்கு நிதி சேர்ப்பதற்காக சங்கத்தின் அங்கத்தினர்கள் இம்மாதம் 8-ம் தேதி **குமாஸ்தாவின் பெண்** என்ற நாடகத்தை நடித்தார்கள். ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி தலைமை வகித்தார்.

இது செய்தி

மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்தவை

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் அடுத்தபடியாக மாயாவதி என்ற புராணப் படத்தையும், வெறும் கோயில் என்ற சமூகப் படத்தையும் தயாரிக்கப் போகிறார்களாம். மாயாவதியை டி. ஆர். சுந்தரமும், மகாராஷ்டிர பிரபல நாவலாசிரியரான காண்டேகரின் வெறும் கோயிலை எல்லிஸ். ஆர். டங்கனும் டைரெக்ட் செய்யப் போகிறார்களாம். வெறும் கோயிலை தமிழில் மொழி பெயர்த்துள்ள கா. ஸ்ரீ. ஸ்ரீ. என்ற எழுத்தாளரே வசனங்களை எழுதுவாரென்று தெரிகிறது.

சனிப் பிரபாவம்

கெம்ப்ராஜ் ப்ரொடக்ஷன்ஸ் என்ற புதிய கம்பெனியார் ஷனி பிரபாவ் என்ற கன்னடப் படத்தையும், கூடவே அதே படத்தை சனிப் பிரபாவம் என்று தமிழிலும் தயாரிக்க திட்டம் போட்டிருக்கின்றனர். இரண்டு படங்களிலும் பி. ஜெயம்மா, எம். வி. ராஜம்மா, கெம்ப்ராஜ் ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கிறார்கள். மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகப் போகும் இப்படங்களை கெம்ப்ராஜ் டைரெக்ட் செய்கிறார். தமிழ்ப் படத்திற்கான வசனம், பாட்டுகளை நடராஜவாத்தியார் எழுதி வருகிறார்.

கொட்டகை சிப்பந்தி குத்தப் பட்டான்

சென்ற மாதம் 23ம் தேதி சூரத் நகரில் ஒரு தியேட்டரின் வாயில் காப்போன் குத்தப் பட்டான். தியேட்டரில் புகை பிடிபபதை அவன் தடுக்கப் போக, கோபம் கொண்ட ஒரு முரடனால் கத்தியால் குத்தப்பட்டானும்.

வாஸனுக்கு விருந்து

இம் மாதம் 2ம் தேதி ஜெமினி ஸ்டுடியோவின் தொழிலாளிகள் தங்கள் முதாலாளியான ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனுக்கு ஒரு விருந்தளித்தார்கள். அவர் (ஹிந்தி) சந்திரலேகாவை வெற்றிகரமாகத் தயாரித்து முடித்ததைக் கொண்டாடவே இந்த விருந்து வைக்கப்பட்டதாம். ஸ்ரீ. வாஸன் தான் அடைந்த மகத்தான வெற்றிக்குக் காரணம் தனது தொழிலாளிகளின் ஒத்துழைப்புத் தான் என்பதைக் குறிப்பிட்டாராம்.

ஆங்கிலத்தில் 'சந்திரலேகா'

மேற்படி விருந்தில் சந்திரலேகாவை ஆங்கிலத்தில் தயாரிக்கும்படி பல பிரமுகர்கள் தன்னைத் தூண்டுவதாகவும், ஆகவே தான் அம் முயற்சியில் ஈடுபடப் போவதாகவும், தன்னுடன் யாவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் ஸ்ரீ. வாஸன் கேட்டுக் கொண்டாராம்.

காந்திமதி

ஜெமினி அடுத்தபடி காந்திமதி என்ற ஒரு படத்தைத் தயாரிக்கப் போவதாகத் தெரிகிறது. அநேகமாக இது ஒரு சமூகப் படமாக இருக்கலாமாம்.

ஹிந்தி 'மங்கம்மா'

ஜெமினி ஸ்டுடியோஸார் அடுத்தபடி மங்கம்மா சபதத்தை ஹிந்தியில் தயாரிக்க திட்டம் போட்டுள்ளனர்.

சென்னை-600008
134113

ஜெமினி போனஸ்

ஜெமினி பிக்சர் ஸர்க்யூட் என்ற பட விநியோக ஸ்தாபனத்தின் தொழிலாளிகளுக்கு ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் மூன்று மாத சம்பளம் போனஸாகக் கொடுத்தாராம்.

'ஜுக்னு'வுக்குத் தடை

ஜுக்னு என்ற ஹிந்திப் படத்தில் ஆட்சேபகரமான பகுதிகள் இருப்பதாகக் கருதி, பம்பாயில் சுமார் இரண்டு வருஷங்கள் ஓடியபின் மேற்படி படம் பம்பாய் சர்க்காரால் தடை செய்யப் பட்டது. இந்தப் படத்தை சென்னை மாகாணத்திலும் எங்கும் திரையிடக் கூடாதென சென்னை சர்க்கார் ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளது.

மத்திய ஆலோசனை போர்டு

படங்களைத் தணிக்கை செய்வது சம்பந்தமாக சீக்கிரமே ஒரு மத்திய ஆலோசனை போர்டை ஏற்படுத்த இந்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. படங்கள் தணிக்கை செய்யப்படுவதுபற்றி இந்தியா முழுதும் ஒரே மாதிரியான கொள்கை வகுக்க இந்த போர்டு பிரேரணைகள் சமர்ப்பிக்கும். படங்களின் தரத்தை உயர்த்தவும் அவ்வப்பொழுது மத்திய போர்டிடம் யோசனைகள் கேட்கப்படுமாம்.

சேம்பரின் கோரிக்கை

சர்க்கார் கொண்டு வந்துள்ள அடிக்கட்டுப்பாடு உத்திரவைப்பற்றி விவாதித்துப் பேச சென்ற மாதம் 22-ம் தேதி தென்னிந்திய பிலிம் சேம்பரின் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்த கட்டுப்பாடு உத்திரவை நிறுத்திவைக்கும்படியும், தற்சமயம் தயாரிப்பிலிருந்து வரும் படங்களை திட்டப்படி முடிக்க வசதியளிக்க குறைந்த பக்ஷம் 18 மாத அவகாசம் அளித்து புது உத்திரவு பிறப்பிக்கும்படியும் சர்க்காரைக் கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடிக்கட்டுப்பாடு உத்தரவு

படங்களின் நீளக் கட்டுப்பாடு விஷயமாக சர்க்கார் விதிக்கத் தீர்மானித்துள்ள சட்டம் இவ்வருஷம் மார்ச் முதல் தேதி முதல்தான் அமுலுக்கு வருமாம்.

அதிக நீளத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போது தயாரிக்கப்படும் படங்கள் பாதிக்கப்படலாம் என்பதைக் கருதித்தான் இந்த உத்திரவு இரண்டு மாதங்களுக்கு தள்ளிப் போடப்பட்டுள்ளதாம்.

பழைய படங்களை பாதிக்காது

இப்பொழுதைய அரசாங்க கட்டுப்பாடு உத்திரவின்படி தியேட்டர்களில் 13,000 அடிகளுக்கு மேற்பட்ட படங்களைத் திரையிடக் கூடாது. ஆனாலும் ஏற்கனவே தயாரான படங்களை இந்த உத்திரவு பாதிக்காது என்று அவர்கள் அறிவித்து விட்டார்கள்.

கண்டனக் கூட்டம்

சென்ற மாதம் 24-ம்தேதி சென்னை மஹாஜன சபா ஹாலில் கட்டுப்பாடு உத்திரவைக் கண்டிக்கும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கே. எஸ். கோபால கிருஷ்ணன் என். எஸ். கிருஷ்ணன் முதலியவர்கள் கட்டுப்பாட்டினால் நேரக்கூடிய பாதகங்களைக் குறித்துப் பேசினார்கள்.

டூரிங் சினிமாக்காரர்கள் மகாநாடு

தென்னிந்திய டூரிங் சினிமா சொந்தக்காரர்களின் முதல் மகாநாடு இம்மாதம் 7-ம் தேதி அரக்கோணத்தில் நடைபெற்றது. இந்த மகாநாட்டிற்கு ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் தலைமை வகித்தார்.

1948 வருஷத்திய சிறந்த படம்

1948-ம் வருஷத்திய படங்களில் சிறந்ததென இத்தாலியப் படமான

பைஸான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த கௌரவம் ஒரு இத்தாலியப் படத்திற்குக் கிடைப்பது இது தான் முதல் தடவையாம்.

கடவுளைக் காட்டாதே!

புராணப் படங்களில் ஹிந்து தெய்வங்கள், தேவதைகளின் பாகங்களை நடிகர்கள் தாறுமாருக நடிப்பதால் மக்களின் பக்தி போய்விடுகிறதென்றும், ஆகவே தெய்வங்களின் பாகங்களைத் திரையில் காட்டுவதைத் தடை செய்தல் நலம் என்றும் சர்க்கார் கருதுகிறதாம். இது விஷயத்தில் தென்னிந்திய பிலிம் சேம்பரின் அபிப்பிராயத்தை சர்க்கார் கேட்டிருப்பதாகவும தெரிகிறது.

கல்வி மந்திரியின் வேண்டுகோள்

சென்ற மாதம் 20-ம் தேதி சினிமா தணிக்கை போர்டு கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கல்வி மந்திரி கனம் அவினசிலிங்கம் செட்டியார் வந்திருந்தார். அறிவை வளர்க்கும், ஒழுக்கத்தை உயர்த்தும் தரமான படங்களையே நம் பட முதலாளிகள் தயாரிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். கூட்டத்தில், வருஷா வருஷம் சிறந்த படங்களுக்குப் பரிசு அளிக்க வேண்டுமென்ற தென்னிந்திய பிலிம் சேம்பரின் வேண்டுகோளை அரசாங்கம் அங்கீகரித்து விட்டதாக அறிவித்தார்.

திருஷ்டி போதனு முறை

சினிமாப் படங்களின் மூலம் பள்ளிக்கூடங்களில் கல்வி போதிக்கும் திட்டத்தைச் சர்க்கார் பரிசிலனை செய்து வருவதாகத் தெரிகிறது. அடுத்த வருஷம் இந்த முறை பரிக்ஷை செய்யப்படுமாம்.

டைரெக்டர் காலமானர்

காற்ருேடு போயிற்று என்ற உலகப் பிரசித்தி பெற்ற படத்தின் டைரெக்டரான விக்டர் பிளெமிங்

ஆசிய மஹாநாட்டினர் சந்திரலேகாவைப் பார்த்தனர்

புது டில்லியில் தற்போது நடைபெற்று வரும் ஆசிய மஹாநாட்டின் பிரதிநிதிகளுக்கெனவே "சந்திரலேகா" ஹிந்திப் படத்தின் பிரத்தியேகக் காட்சி ஒன்று சென்ற 20-ந் தேதி இரவு நடைபெற்றது. இப் படத்தைப் பார்த்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், உள் நாட்டுப் பிரமுகர்களும் மிகத் திருப்தி அடைந்தார்களாம்.

இம்மாதம் 6-ம் தேதி காலமானார். அவர் சுமார் 30 படங்களை டைரெக்ட் செய்துள்ளார். அவர் கடைசியாக டைரெக்ட் செய்த படம் ஜோன் ஆப் ஆர்க் என்பதாகும்.

தணிக்கை போர்டுக்கு புது மெம்பர்கள்

சென்னை சினிமாத் தணிக்கை போர்டிலிருந்து டைரெக்டர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் ராஜீநாமாச் செய்துவிட்டார். அவருக்குப் பதில் தென்னிந்திய பிலிம் சேம்பரின் காரியதரிசி பி. வி. கிருஷ்ணய்யர் நியமிக்கப்பட்டிருக்கிறார். எம். ஏ. ரஹ்மானையும் ஒரு அங்கத்தினராக நியமித்திருக்கிறார்கள்.

டாகுமென்டரி பில்ம்ஸ் திறப்பு விழா

சென்ற மாதம், 25ம் தேதி, காங்கிரஸ் பொருட் காட்சி மைதானத்தில் டாகுமென்டரி தியேட்டரை, சர்க்காரின் விளம்பர, ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீ. ஆர். ஆர். திவாகர் ஆரம்பித்து வைத்தார் இந்த விழாவுக்கு ஸ்ரீ.காமராஜ் தலைமை வகித்தார். முடிவில் '1946ல் மகாத்மாவின் தென்னிந்திய விஜயம்!' 'சென்னையில் சுதந்திர தினக் கொண்டாட்டம்' ஆகிய படங்கள் காட்டப் பட்டன.

டாகுமென்டரி பில்ம் போர்டு

சென்ற மாதம் 26ம் தேதி, அறிவூட்டுவதும், போதனை அம்சங்கள் நிறைந்ததுமான படங்களைத் தயாரிக்கவும் ஸ்ரீ. காமராஜ் தலைமையில் 'சென்னை டாகுமென்டரி பில்ம் போர்டு' என்ற ஒரு புது ஸ்தாபனம் அமைக்கப் பட்டது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஒரு நிமிஷம் மௌனமாயிருந்து, மறைந்த மகாத்மாவுக்கு வணக்கம் செலுத்தினார்கள். பிறகு 'டாகுமென்டரி' படங்களைப் பற்றி பலர் பேசினார்கள். சில முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

வீ த்ரீ

ஏவி. எம். தமது அடுத்த படத்திற்கான வேலைகளில் முனைந்திருக்கிறாம். தற்காலிகமாக வீ த்ரீ என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் காளி என். ரத்தினம், கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், பண்டரிபாய் முதலியவர்கள் நடிப்பது நிச்சயமாகி விட்டதாம். எஸ். வி. ஸஹஸ்ரநாமம், பி. எஸ். சரோஜா இருவரும்கூட இப்படத்தில் நடிக்கிறார்களாம். இந்தப் படத்தின் கதை வசனங்களை ப. நீலகண்டன் எழுதி வருகிறார். இப்படத்திற்கு வாழ்க்கை என்று பெயரிடப்படலாமெனத் தெரிகிறது.

லாவண்யா

இப்பெயருடன் வாஹினி ஸ்டுடியோவில் ஒரு தமிழ்ப் படம் தயாராகி வருகிறது. குமாரி கமலா தோன்றும் சில காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. இப்படத்திற்காக டி. கே. பட்டம்மாள், பி. ஏ. பெரியநாயகி இவர்களின் சில பாட்டுகள் ஒலிப்பதிவாகியுள்ளன.

கும்மரி மொல்லா

ரேணுகா பில்ம்ஸார் அடுத்தபடி கும்மரி மொல்லா என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். மண் பாண்டங்கள் செய்யும் குலத்தில் பிறந்த மொல்லா என்ற பக்தையைப பற்றிய கதையாம். ராமாயணத்தைத் தெலுங்கில் இந்தப் பெண்மணி இயற்றியுள்ளாராம். நாகய்யா தந்தையாக நடிப்பதுடன் படத்தையும் டைரெக்ட் செய்யப் போகிறார்.

இதய கீதம்

ரஜபுத்திர வீரத்தைப் பற்றிய காதல் சித்திரமான இதய கீதம் என்ற படத்தை சிடேடல் பில்ம்ஸார் தயாரிக்கப் போகிறார்களாம். டி. ஆர். மஹாலிங்கமும், டி. ஆர். ராஜகுமாரியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். நியூடோன் ஸ்டுடியோவில் ஜோஸப் தளியத்தின் டைரெக்ஷனில் இப்படம் தயாரிக்கப்படும்.

'புல்-புலையான்'

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மினர்வா பிக்சர்ஸார் புல்-புலையான் என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். 'முருகதாஸா'வின் டைரெக்ஷனில் தயாராகப் போகும் இப்படத்திற்கான, கதை வசனங்களை 'இளங்கோவன்' எழுதுகிறாராம். பாட்டுகளை 'கம்பதாஸன்' இயற்றுகிறாராம். சங்கீத டைரெக்ஷன் பொறுப்பை ஜி. கோவிந்தராஜுலு ஏற்றுக் கொண்டிருக்கிறாராம். இப்



அரிய ஈஸ்ட்டன் மருந்துகள்

மானிட திரேகத்தில் ஏற்படும் வியாதிகளை மிகச் சுலபமான முறையில் சுகப்படுத்தும் அரிய மருந்துகள், பல லக்ஷக்கணக்கான ஜனங்களுடைய சுகவாழ்வுக்கு உதவி அளிக்கப் பட்டவை. இந்த மருந்துகளுக்கு பத்தியம் கிடையாது.

1. **வாறாட்டு மாத்திரைகள்:** இது இனிப்பு நீரிழிவையும், மேக வியாதிகளையும் மிக சுலபமாக சுகப்படுத்துகின்றது.

2. **யாலிபிட் மாத்திரைகள்:** இது மூல வியாதிகளையும், உஷ்ண வாய்வுக்களால் உண்டாகும் உபத்திரவங்களையும் சுகப்படுத்துகிறது.

3. **தாக்கம் மாத்திரைகள்** இது உஷ்ணச்சூடு, வெள்ளை வெட்டை முதலான வியாதிகளை மிக சுலபமாக சுகப்படுத்துகின்றது.

4. **லார்பிட்டிக்கு மாத்திரைகள்:** இது திரேகத்திலுள்ளதான நாடிகளுடைய சோர்வை நீக்கி திரேக பலத்தைத் தருகின்றது. மற்றெல்லா விதமான வியாதிகளுக்கும் மருந்துகள் உண்டு. தாங்கள் எழுதவும். இந்த மாத்திரைகள் 25 நாட்கள் சாப்பிடக்கூடிய 100 மாத்திரைகளுக்கு ரூ. 12. மேலும் தங்களுடைய ஜாதக பலனை மிகமிக சரியாக கவனித்து பலன்களை சரியாக எழுதி அனுப்புவதுடன், தாங்கள் கேட்கும் 5-கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதி அனுப்புகிறோம். ரூ. 5/—உடன் தங்களுடைய ஜாதக நகலை அனுப்பவும். விலாஸம்:—

Prof. S. K. PATTATH, B. B. Dispensary, P. O. Batang Berjuntai,
(Selangor) MALAYA.

படம் வாஹினி ஸ்டுடியோவில் தயாரிக்கப் படலாமெனத் தெரிகிறது.

ஸ்ரீ கலா சக்தி நாடக சபா

நாட்டிய நடிகை டி. கே. பட்டம்மாளின் முயற்சியினால் சென்னையில் ஸ்ரீ கலா சக்தி நாடக சபா ஆரம்பமாகி யிருக்கிறது. அவர்களது முதல் நாடகம் கற்பின் சக்தி பிப்ரவரி மாதத்தில் நடைபெறுமாம். பட்டம்மாள், ஆர். எம். சோமசுந்தரம் மற்றும் பல சினிமா நடிகர்கள் நடிக்கப்போகும் இந்த நாடகத்தின் ஒத்திகைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ண பரமாத்வின் ஆசி

இம் மாதம் 17ம் தேதி ராகிணி பிலிம்ஸ் கட்டிடத்தில் அவர்களது தூக்குத் தூக்கி பட ஆரம்ப பூஜை நடை பெற்றதாம். அது சமயம் கிருஷ்ண பரமாத்மா நேரே வந்து ஆசி கூறி, ஒரு பாட்டுப் பாடி விட்டுப் போனாராம். அன்று பூஜைக்கு படத்தின் பிரதான நடிகர்கள் எல்லோரும் வந்திருந்தனர். டி. ஆர். மஹாலிங்கத்திற்கு அன்று பாரிஜாதம் படத்தில் ஷூட்டிங் இருந்தது. பாதி ஷூட்டிங்கில் மேற்படி பூஜைக்காக (கிருஷ்ணன்) மேக்-கப்புடன் அப்படியே வந்து ஆசி கூறி விட்டுப் போனாராம் அவர்!

ராம்னாத் ராஜீநாமா

தென்னிந்திய பிலிம் சேம்பரின் காரியதரிசிகளில் ஒருவராக இருந்த ஸ்ரீ. ராம்னாத் தமது பதவியை ராஜீநாமாச் செய்து விட்டார்.

மேலும் கட்டுப்பாடு

வருகிற மார்ச் முதல் தேதி முதல் படங்களின் நீளம் 13,000 அடிகளுக்கு மேற்படக் கூடாதென சென்னை சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளது. ஆனால் இந்திய சர்க்காரோ, "11,000 அடி நீளக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டு வரமுடியுமா?" என்று சென்னை சர்க்காரைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

திருமணங்கள்

"சுபஸ்ரீ" என்ற புனைபெயர் கொண்ட எழுத்தாளர் ஸ்ரீ. எஸ். டி. ஸ்ரீனிவாஸன், பங்களூர் மிலிட்டரி அக்கௌன்ட்ஸைச் சேர்ந்த ஸ்ரீ. வி. ஸ்ரீனிவாஸன் எம். ஏ. அவர்களின் புத்திரி சௌ. ராஜத்தை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றார்.

* * *

"எபிஷியன்ட் பப்ளிஸிடி" என்ற விளம்பர ஸ்தாபனத்தின் டைரெக்டர்களில் ஒருவரான ஸ்ரீ. எஸ். கணபதிக்கும், சௌ தர்மாம்பாளுக்கும் சென்ற 26-ந் தேதியன்று திருவனந்தபுரத்தில் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. இப்புதுத் தம்பதிகளுக்கு நம் ஆசிர்வாதங்கள் உரித்தாகுக.

சங்கீத வித்வான், மணக்கால்

எஸ். வரதராஜ அய்யர்



இவர் சங்கீத மேடைகளில் அடிக்கடி தோன்றி அற்புதமாக கானம் செய்து ரஸிகர்களை மகிழ்வித்து வருகிறார்.

"கிருஷ்ண பக்தி"—ஒரு நல்ல படம்

ஆர். எஸ். மணியின் திறன்மிக்க டைரெக்ஷன்

நேயர்கள் நெடு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணா பிக்சர்ஸின் கிருஷ்ண பக்தி படம் பொங்கலன்று முதல் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தேவகுமாரி என்னும் தாசி, தன் குலத்திற்கேற்ற தொழிலை வெறுத்து வந்தாள். அவ்வூர் அரசன் அவள் மேல் அடங்காத மோகம் கொண்டிருந்தான். அந்நாட்டு ராஜகுருவும் அவள்மேல் காதல் கொண்டான். ராஜகுரு கபட நாடகம் ஆடுபவன், பக்திமான் போல் வேஷமிடுபவன். ஊரை ஏமாற்றி வருகிறான் அவன். ஒரு நாள் தேவகுமாரி கேட்கும்படியாக ஒரு கதா காலக்ஷேபத்துக்கு ஏற்பாடு செய்து அவள் மனதைத் திருப்பி விடுகிறான். ஒரு சமயம் ராஜகுரு அவளை ஏமாற்றி வரவழைத்து, கற்பைக் கெடுக்க முயலுகிறான். ஆனால் கற்பின் சக்தியால் அவளைத் தீண்டக்கூட முடியாமல் தூக்கி எறியப்படுகிறான். மனச்சாட்சி உணர்த்துகிறது அவன் தவறை. கடைசியில் சீர்திருந்தி விடுகிறான்.

இப்படத்தின் வசனங்களை எஸ். டி. எஸ். யோகி, சுத்தானந்தர், சாண்டில்யன், கு. ப. சேது அம்மாள் ஆகியவர்கள் எழுதியிருக்கிறார்கள். வசனகர்த்தாக்கள் அர்த்தபுஷ்டியுடனே எழுதியிருக்கிறார்கள். "சாண்டில்யன்" இப்படத்தில் பெரும்பாலான பகுதிகளை எழுதியதாகத் தெரிய வருகிறது. மொத்தத்தில் வசனம் நன்கு அமைந்திருக்கிறது.

உடுமலை நாராயண கவி பாட்டுகளை வெகு சிறப்பாக எழுதியிருக்கிறார்.

நடிப்பிலே, சின்னப்பா நம் மனதை எளிதில் கவர்கிறார். அவர் கண்ணகிக்குப் பிறகு சிறப்பாக நடித்த படம் இதுவே என்று கூறலாம். மனச்சாட்சியுடன் போராடுமிடம் மிக நன்றாக இருக்கிறது. தேவகுமாரியாக நடிக்கும் ராஜகுமாரி, தான் ஏற்ற பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். கே. ஆர். ராமசாமி கிருஷ்ணனாகத் தோன்றுகிறார். வேஷப் பொருத்தம் நன்றாய் இருக்கிறது. பாமாவாக நடிக்கும் பி. ஏ. பெரியநாயகியும், நாரதராக நடிக்கும் சிதம்பரம் ஜெயராமனும் பிரமாதமாகப் பாடியிருக்கிறார்கள். கிருஷ்ணன் மதுரம் ஹாஸ்யம் கொஞ்சமாக இருந்தாலும் திருப்திகரமாய் இருக்கிறது. மற்றும், புளிமூட்டை, ராஜகாந்தம், ஆழ்வார், பாலசுப்ரமண்யம் ஆகியவர்கள் தங்கள் பாகங்களைக் கச்சிதமாக நடித்திருக்கிறார்கள். 'பரந்த அனுபவம்' பாண்டியன் மாமாவாக வந்து நகைப்பூட்டுகிறார். எம். எல். வசந்தகுமாரியின் கச்சேரியும், ஸரோஜா, வி. ஆர். ராஜகுமாரி ஆகியோரின் நடனமும் பாராட்டத் தக்கதாய் இருக்கின்றன.

ஒளி, ஒலிப்பதிவுகள் திருப்திகரமாய் இருக்கின்றன.

இப்படத்தை டைரெக்ட் செய்த ஸ்ரீ. ஆர். எஸ். மணியை மிகப் பாராட்டுகிறோம். ஆபாசங்கள் இன்றி, ஒரு உன்னத கதையை, உணர்ச்சி ததும்பத் தயாரித்திருக்கிறார். உபமானங்களைக் காட்டி சில இடங்களில் உணர்த்தியிருப்பது பாராட்டத்தக்கது. பசுத்தோல் போர்த்த புலி என்பதற்கு உபமான 'ஷாட்'டில் காண்பிப்பதும், தேவகுமாரியின் நிலையை பாம்பு வாய் அகப்பட்ட தேரைக்கு உபமானமாகக் காட்டுவதும் நன்றாக இருக்கிறது.

மொத்தத்தில் கூறப்போனால், ஆபாச உணர்ச்சிகள் எழவொட்டாது, உன்னதமான ஒரு கலைவிருந்தை இப்படத்தின் மூலம் நமக்கு அளித்திருக்கிறார்கள் கிருஷ்ணா பிக்சர்ஸார் என்றுதான் கூறவேண்டும்.

பிரம்மலோகம்

ஒளவையார்

ஜெமினியின் அடுத்த வெளியீடான இப்படத்திற்காக சுப்பு—சுந்தரிபாய் தோன்றும் ஹாஸ்ய பாகங்கள் படமாக்கப் பட்டு வருகின்றன.

நவஜீவனம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸின் இப்படம் தெலுங்கு வருஷப் பிறப்பன்று திரையிடப் பெறுமாம். நாகய்யா, கண்ணாம்பா, ஸ்ரீராமன், வரலக்ஷ்மி, டி. ஏ. ஜெயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன், ஸி. வி. வி. பந்துலு, பேபி ராஜாமணி ஆகியோர் இதில் முக்கிய நடிகர்கள். டைரெக்ஷன் கே. பி. நாகபூஷணம்.

நல்லதம்பி

கிருஷ்ணன், மதுரம், ஸஹஸ்ரநாமம், பானுமதி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் ஸென்ஸாராகி விட்டது. பிப்ரவரி 4ம் தேதி முதல் முக்கிய நகரங்களில் திரையிடப் படுகிறது.

பாரிஜாதம்

லாவண்யா பிக்சர்ஸாரது இப்படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ட் செய்து வருகிறார். ஏற்கனவே ஏ. டி. கிருஷ்ணஸ்வாமியின் டைரெக்ஷனில் தயாரான சில காட்சிகள் கூட மீண்டும் படமாக்கப் படும் என்று தெரிகிறது.

மங்கையர்க்கரசி

சின்னப்பா, கண்ணாம்பா, அஞ்சலிதேவி பிரதம பாகங்களில் தோன்றும் இப்படத்தில் கிருஷ்ணன் மதுரமும் நடிக்கப் போகிறார்கள். லலிதா-பத்மினி நடனம் இருக்கும். ஜிதன் பானர்ஜியும, எப். நாகூரும் இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்கள்.

ரத்னகுமார்

முருகன் டாக்கிஸாரின் இபபடம் தமிழ் வருஷப் பிறப்பன்று திரையிடப் படுமெனத தெரிகிறது. சின்னப்பா, பானுமதி, மீனலோசனி, கிருஷ்ணன், மதுரம் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ஷனில் முடிவடையும் நிலையில் இருக்கிறது.

அம்பிகா தேவி

நடுவில் சில மாதங்களாக நின்று போயிருந்த இப்படத்தின் ஷூட்டிங் மண்டும ஆரம்பமாகி நடந்து வருகிறது. டி. ஆர். கோபு இபபடத்தின் டைரெக்டராக அமர்த்தப் பட்டிருக்கிறார்.

தேவ மனோஹரி

ஆர்கேயெஸ் பிக்சர்ஸின் இப்படத்தில் ஏற்கனவே உள்ள நடிகர்களுடன் பானுமதியும், எம. ஆர். சுவாமிநாதனும் நடிகக ஒபபந்தம் செய்யப் பட்டிருக்கிறார்கள்.

கனகாங்கி

பம்பாய் மோஹன் ஸ்டுடியோவில் ஸ்டேட் ப்ரொடக்ஷன்ஸார் கனகாங்கி என்ற புராணப்படத்தைத் தயாரித்து வருகிறார்கள். இதில் காலஞ் சென்ற எஸ். ஜி. கிட்டப்பாவின் மருமானான பி. கங்காதரன் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றும் வி. என். ஜானகி, டி. எம். லீலா, ஸி. டி. கண்ணபிரான், கே. நடராஜன், நந்தினி ஆகியவாகளும் நடிக்கின்றனர். இநதப் படத்தை தயாரிக்கும டி. ஆர். கோபால் என்பவரே படத்தையும் டைரெக்ட் செய்கிறா.

வேலைக்காரி

ஜுபிடர் பிக்சர்ஸாரின் இப்படம் தணிக்கை ஆகிவிட்டது. பிப்ரவரி மாதக் கடைசியில் இப்படம் தமிழ் நாட்டின் பிரதான நகரங்களில திரையிடப்படும். ராஜம்மா, வி. என். ஜானகி, கே. ஆர். ராமசாமி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கும இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ட் செய்திருக்கிறார்.

கீத காந்தி

கே. சுப்ரமண்யத்தின் டைரெக்ஷனில் நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாராகி வந்த இபபடம் ஸென்ஸாராகி விட்டது. இம்மாதக் கடைசியில் சென்னை கெயிட்டியிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் திரையிடப் படுமெனத் தெரிகிறது.

ஜீவமணி

விண்ட்ஸர் ப்ரொடக்ஷன்ஸார் இப்படத்தை ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாரித்து வருகிறார்கள். டி. ஏ. ஜெயலக்ஷ்மி, ராஜாமணி, என. ஆர். சகுந்தலா முதலியவர்கள் நடிக்கின்றனர்.

சித்தூர் வி. நாகய்யா

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

உடனே அவர் கற்பூரத்தை ஏற்றி வைத்து, நமஸ்காரம் செய்து, குழந்தையை ஒன்றும் செய்யக் கூடாது என்று வேண்டிக் கொண்டாராம். ஆச்சரியப் படத்தக்க வகையில் அந்த நாகம் குழந்தை நாகய்யாவுக்கு ஒரு தீங்கும் விளைவிக்காமல் சங்கிலி வழியாய் ஏறிப்போய் விட்டதாம். அதன் காரணமாகவே நாகேஸ்வரன் என்ற பெயர் ஏற்பட்டதாம் நாகய்யாவுக்கு.

நாகய்யா இப்பொழுது திறமை மிக்க ஒரு பல்கலைஞராக விளங்குவதற்கு அஸ்திவாரம் அவரது தகப்பனார்தான். ஸ்ரீ வி. ஆர். சர்மா சர்க்கார் உத்தியோகத்திலிருந்த போதிலும் சங்கீதத்தில் ஒரு வித்வானாயிருந்து வந்தார். அவர் அடிக்கடி கதா காலக்ஷேபங்களைச் செய்வதுமுண்டாம். வெகு அழகாக பிடில் வாசிப்பதற்கும் அவருக்குத் தெரியுமாம். இவை தவிர அவர் சம்ஸ்கிருத பாஷையில் நிறையப் படித்தவராம். ஆகவே நாகய்யாவுக்கு அவர் ரகுவம்சம், அமரம், சாமவேதம் முதலியவற்றை சொல்லிக் கொடுத்தாராம். "இவையெல்லாம் எனக்கு இப்பொழுது உணர்ச்சி மிக நடிப்பதற்கும், நாக் குழறாமல் சுத்தமாகப் பேசுவதற்கும், நல்ல புதிய மெட்டுகளை அமைப்பதற்கும் பேருதவியா யிருக்கின்றன"— என்று நாகய்யா கூறுவது கவனிக்கத் தக்கது.

தகப்பனாரே சங்கீத வித்வானாயிருந்ததால் நாகய்யா மூன்று நான்காவது வயதிலேயே பாட ஆரம்பித்தது ஆச்சரியப்படத் தக்கதேயல்ல. அதோடு ..ட அந்தக் காலத்திய வித்வான்க ..ல்லாம் அவர்கள் ஊருக்குவந்தால் ..ர்களுக்கு ஸ்ரீ. சர்மா மிகுந்த ..ரங்கள் செய்வாராம். நல்ல சங்கீதத்தை நிறையக் கேட்பதற்கும் அ.. போல் பாடிப் பார்ப்பதற்கும் நாக..யாவுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் ஏ..பட்டிருந்தன. ஆதலால் அவர் பி..யாசையின்றியே சங்கீதத்தில் தேர்ந்து வந்தார்.

ஒரு சமயம்—நாகய்யாவுக்கு அ.. பொழுது ஏழு வயதே ஆகியிருந்தது. அவர் தம் பள்ளிக்கூடத்தில் நடந்த பிரஹலாதா நாடகத்தில் பிரஹலாதனாக நடித்து, நடிப்பின் மூலமும் பாட்டின் மூலமும் எல்லோரது 'சபாஷை'யும் பெற்றார். இதைக் கண்ட ஸ்ரீ. சர்மா பூரித்துப் போனார். பிரபல சங்கீத வித்வான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் தகப்பனாரான ஸ்ரீ. பேரய்யா பிள்ளையிடம் தம் புத்திரனுக்கு சிக்ஷை ஏற்படுத்தி வைத்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு நாகய்யா காலஞ் சென்ற பிரபல வித்வான் நயினா பிள்ளையின் சிஷ்யர் ஆனார். அவர் பள்ளிக்கூடத்தில் படித்தபடியே சங்கீதத்திலும் பயிற்சி பெற்று வந்தார். 'நாகய்யா நயினாப் பிள்ளையின் சிஷ்யர்' என்று சொல்லி விட்டால் அவருடைய சங்கீத வல்லமையைப் பற்றி வேறு ஒன்றுமே சொல்ல வேண்டிய அவசியம் இராதல்லவா?

பொடிப் பையனாயிருந்த போதே நாகய்யாவுக்கு சங்கீதத்திலும், சங்கீத வித்வான்களிடமும் அளவிலாத பிரேமை ஏற்பட்டிருந்ததை விளக்க இங்கு இரண்டு சம்பவங்களைக் குறிப்பிடலாம். ஒரு சமயம் அவரது தகப்பனார் நெல்லூர் ஜில்லாவிலுள்ள இச்சப்பாளையம் என்ற ஊரில் உத்தியோகம் பார்த்து வந்தபோது, அந்த ஊர் தனவந்தரான ஒரு ரெட்டியார் வீட்டுக் கலியாணத்தில் கச்சேரி செய்

ம்காக பிரபல வித்வான்களான புஷ்பவனம், பிடில் கோவிந்தசாமி பிள்ளை, தக்ஷிணமூர்த்திப் பிள்ளை, முதலியோர் விஜயம் செய்திருந்தனர். நாகய்யாவும் புஷ்பவனமும் சங்கித நண்பர்களாதலால் நாகய்யாவுக்கு இந்தக் கோஷ்டியினரின் பரிச்சியம் ஏற்பட்டது. பரிச்சியத்தோடு நிற்காமல் நாகய்யா நாள் பூராவும் அவர்கள் வீட்டிலேயே தங்கி, தாமாகவே அவர்களுக்கு சிறு பணிகளைச் செய்து வந்தார்.

இதைக்கண்ட அவ்வித்வான்கள் ஆச்சரியம் அடைந்தனர். "இந்தப் பையனுக்கு சங்கிதப் பைத்தியம் இல்லாவிட்டால் இப்படி நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கமாட்டான்" என்று தீர்மானித்தனர். "பையா! உனக்குப் பாடத் தெரியுமாடா!" என்று கேட்டாராம் புஷ்பவனம். நாகய்யா தயங்காமல், "ஓ! தெரியும்!" என்று நீண்டதலை யசைப்புடன் கூறினர். இதைக் கேட்டதும் கோவிந்தசாமி பிள்ளையவர்கள், "சபாஷ்டா, ராஜா! எங்கே பாடு; நான் பிடில் வாசிக்கிறேன்" என்று பிடிலை எடுத்துக் கொண்டாராம். நாகய்யா பிரஹலாதா நாடகப் பாட்டொன்றைப் பாடினர். அது முடிந்ததும் புஷ்பவனம் அவர்களும், தக்ஷிணமூர்த்தி பிள்ளையவர்களும் "பலே, பலே!" என்றுகூறினர்களாம், "அப்பொழுது நான் பாடிய அந்த சாதாரணப் பாட்டில் என்ன சிறப்பைக் கண்டு அந்த வித்வான்கள் என்னைப் பாராட்டினர்களோ எனக்குத் தெரியாது!" என்று நாகய்யா கூறுகிறர்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு அப்பக்கங்களில் புஷ்பவனம் அவர்களின் கச்சேரி யென்றுல் அங்கு நாகய்யாவைப் பார்த்துக் கொள்ளலாம். ஒரு முறை இந்த வித்வானின் கச்சேரி மதுரையில் நடக்கப் போவதாக நாகய்யா அறிந்தார். அன்று சாயந்திரமே முன்பின் யோசியாது, யாரிடமும் சொல்லிக் கொள்ளாது நாகய்யா ரயிலேறி விட்டார். மதுரை சென்று கச்சேரி கேட்டபின், "கையில் பணமில்லாமல் எப்படி வீடு திரும்புவது?" என்ற பிரச்னை ஏற்பட்டது. ஒரு ஜட்கா வண்டிக்காரனிடம் தன் காதிலிருந்த கடுக்கன்களை விற்றுவிட்டு அப்பணத்தைக் கொண்டு வீடு திரும்பினர்.

எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறியதும் நாகய்யா சென்னைக்கு வந்து கல்லூரியில் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினேழு தான். கல்லூரியில் சேர்ந்த பின் அவருக்கு படிப்பில் கவனம் செல்லவில்லை. அதற்குப் பதில் கலியாணத்தில் கவனம் சென்றது. அவர் தம் தகப்பனரின் செல்லப் பிள்ளையாதலால் தம் மனதிலுள்ளதை ஒளிக்காது தைரியமாய் தம் தகப்பனருக்கு எழுதி விட்டார். விரைவில் அவருக்குத் திருமணம் செய்து வைத்தார் தகப்பனர். கடுமையான படிப்பு முற்றுப் பெற்றது; இன்பமிக்க இல்லற வாழ்க்கை ஆரம்பமாயிற்று.

நாகய்யா சித்தூர் ஜில்லா போர்டில் ஒரு குமாஸ்தாவாக அமர்ந்தார். தகப்பனரும் ரிடையராகி அவருடன் வந்து தங்கினர். நாகய்யாவுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தனர். அவர் அடிக்கடி ஸ்ரீ ராமவிலாஸ் அமெச்சூர் நாடக சபாவின் நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளுவார். அவர் கபீர் வேஷத்தில் தோன்றி விட்டால் ஒரே கரகோஷமா யிருக்குமாம். அவர் சில சமயம் ஸ்திரீ வேஷங்களில் கூடத் தோன்றியிருக்கிறாராம்.

இந்த சந்தோஷகரமான வாழ்க்கை சொற்ப வருஷங்களே நீடித்தன. பிறகு, இன்பமெல்லாம் எப்படி சேர்ந்து வந்தனவோ அது போல் துன்பமும் ஒன்று கூடி அவ[...] அடைந்தன. அவரது பிரிய ம[...] யார் காலமானர். சிறிது கா[...]

அவரது அருமைக் குழந்தைகளும் இறந்து போயின.

இரண்டாம் தடவை விவாஹம் செய்து கொள்ளும் படி அவரது தாயார் வற்புறுத்தினார். அதைத் தட்ட முடியாமல் வேண்டா வெறுப்புடன் ஒரு பெண்ணைப் பார்ப்பதற்காக தாயாருடன் அவர் சென்றார். பெண் வீட்டை (கால் நடையாக) அணுகியதும் உள்ளிருந்து வந்த கர்ணாம்ருத கானம் அவரைக் கவர்ந்தது. ஒரு பெண் குரல், "நனுடாலிம்ப நடச்சி ஒச்சிதிவோ" என்ற கீதத்தை (இதன் அர்த்தம் "என்னைக் காப்பதற்காக நீ நடந்தே வந்தாயோ ?" என்பது) அதி இனிமையாய் பாடியது கேட்டது.

நாகய்யா பாட்டைக் கேட்ட வண்ணமே நின்று விட்டார். தாயார் மட்டும் உள்ளே சென்று திரும்பினார். "நான் பெண்ணைப் பார்க்க வேண்டியதேயில்லை. ஏற்பாடு செய்து விடு" என்று அம்மாவிடம் தெரிவித்தார் நாகய்யா. நேரில் பார்த்திருந்தால்கூட அந்த அழகியை அவர் நிராகரித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

இரண்டாம் முறையாக ஆரம்பமான நாகய்யாவின் இல்லற வாழ்க்கை சகல சந்தோஷங்களுடனும் மூன்றே வருஷங்கள் தான் நீடித்தது. பின்னர் அவரது இரண்டாவது மனைவியும் காலமானார். சில மாதங்களிலே அவரது தகப்பனாரும் காலமானார். நாகய்யாவுக்கு இந்த உலகமும் வாழ்க்கையும் ஒரே பாலைவனமாகத் தோன்றியது. தம் காரியாலயத்தில் நீண்ட நாள் லீவ் எடுத்துக் கொண்டு க்ஷேத்திர யாத்திரையைத் தொடங்கினார். திருப்பதியில் அவர் கொஞ்ச காலம் தங்கியிருந்தார். பிறகு அவர் ரமணாஸ்ரமத்தை அடைந்தார்.

இதற்குள் அவரது மனப் புண்கள் ஓரளவு ஆறிவிட்டன. எனினும் அவர் தம் ஊருக்கும் வேலைக்கும் திரும்ப விரும்பவில்லை. ஆதலால், அவர் சென்னையை அடைந்தார். அவர சங்கீதம் அவருக்குத் துணை நின்றத "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெ னியின் சங்கீத இலாகாவில் அவ வேலைக்கமர்ந்தார்.

இந்த உத்தியோகத்தில் அமர்ந்த தும் அவருக்கு மீண்டும் இந்த உலகத் தில் மட்டுமன்றி, சினிமா உலகத்தி லும் பரிச்சியம் ஏற்பட்டது. தாமே ஒரு படத்தைத் தயாரிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது அவருக்கு. அதன் விளைவாக, "பர்பெக்ட் பிக்சர்ஸ்" என்ற கம்பெனி தோன்றியது. ஆனால் நோக்கம் வெற்றி பெறவில்லை. எனினும் மனம் தளராது நாகய்யா "பிரபாகரா பில்ம்ஸ்" என்ற கம்பெனியை தோற்றுவித்தார். ஆனால் இந்த முயற்சியால் அடைந்த பலன் கொஞ்சம்; ஏற்பட்ட கஷ்டங்களோ அளவற்றது.

இந்த சமயத்தில்தான் டைரெக்டர் எச். எம். ரெட்டி "கிருஹலக்ஷ்மி" படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அவரது கம்பெனியில் (டைரெக்டர்) பி. என். ரெட்டிக்கும் பங்கிருந்ததாலும், நாகய்யா தம்முடைய நண்பராயிருந்ததாலும், அவரை "எச். எம்."மிடம் "பி. என்." சிபார்சு செய்தார். கிருஹலக்ஷ்மியில் நாகய்யாவுக்கு முக்கிய பாத்திரம் அளிக்கப் பட்டது. அவரது நடிப்பு, பாட்டு இரண்டும் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தன.

இதன் பின்னர் பி. என். ரெட்டி வாஹினி பிக்சர்ஸை ஆரம்பித்தார். தம் வந்தே மாதரம் படத்தில் நாகய் யாவை கதா நாயகனாய் நடிக்கச் செய்தார். இப் படத்திற்கு அமோக வெற்றி கிடைத்தது. நாகய்யாவு நக்ஷத்திர மதிப்பைப் பெற்றார். அ முதலாக, சுமங்கலி, தேவதா, பக் போதனா, ஸ்வர்க்க சீமா, யோ வேமனா ஆகிய வாஹினி படங்க அனைத்திலும் நாகய்யாவுக்குத் தா பிரதம பாத்திரம். வாஹி

வொன்றும் ஒரு மணியாக இருக்கும் படங்களைத் தயாரிக்கிறார்கள். அவை ஒவ்வொன்றிலும் நாகய்யா புதுப்புது மாதிரியான பாத்திரங்களில் புதுப்புது மாதிரியாகக் காட்சி அளித்திருக்கிறார். ஒவ்வொன்றிலும் அவர் இணையற்ற வெற்றி பெற்றுமிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

தேவதாவில் நடித்த பின் ஜெகதீஷ் பிலிம்ஸாரின் விஸ்வமோஹினியில் நடித்தார். பிறகு அசோக் குமார் தமிழ்ப் படத்தில் அவர் முதன் முதலாகத் தோன்றினார்.

இந்த சமயத்தில் நாகய்யா மூன்றாம் முயற்சியாக ஸ்ரீ ரேணுகா பிலிம் கம்பெனியைத் தோற்றுவித்தார். இது தயாரித்த பாக்ய லக்ஷ்மி சுமாரான வெற்றியைப் பெற்றது. இப்படத்தில் நடித்தபடியே அவர் செஞ்சுலக்ஷ்மி தெலுங்குப் படத்திலும், மீரா தமிழ்ப் படத்திலும் நடித்தார். இவ்விரண்டிலும் அவரது பாகங்கள் சோபிக்காததற்கு அவரைக் குறை கூறுவதற்கில்லை.

ரேணுகாவின் இரண்டாவது படமாக தியாகய்யா தெலுங்குப் படம் வெளி வந்தது. இப்படத்தை நாகய்யா உன்னத முறையில் தயாரித்திருந்தார். அதற்கேற்ற வெற்றியையும் அவர் அடைந்தார். அதோடு கூட இப் படம் அவரை ஒரு டைரெக்டராகவும் ஆக்கி வைத்தது.

நாகய்யா கடைசியாக நடித்துள்ள தமிழ்ப் படங்கள் பக்த ஜனாவும், சக்ரதாரியும் ஆகும். ஜனாவில அவருக்கு அதிக வேலை கொடுக்கப்பட வில்லை. ஆனால் சக்ரதாரியிலோ அசல் கோராகும்பராகவே விளங்குகிறார்; கல் மனதும் கரையும்படி நடித்திருக்கிறார்.

தற்போது நாகய்யா மன தேசம் தெலுங்குப் படத்திலும், நவஜீவனம் தமிழ்ப் படத்திலும் நடித்து வருகிறார். [illegible] படத்தைத் தயாரிப்பதற்கும் அவர் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

நாகய்யா ஒரு மஹோன்னத நடிகர். இந்தியா பூராவிலுமே அவருக்கு இணையாகச் சொல்லக்கூடிய நடிகர் இல்லை. காதல், சோகம், வீரம், பக்தி முதலிய எந்த ரஸபாவத்தையானாலும் சரி; தத்ரூபமாய் நடிக்கும் திறமை அவரிடம் இருக்கிறது. பாத்திரத்திற்காக அவர் அமர்த்தப்பட்டாரா அல்லது அவருக்காகவே அந்தப் பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டதா என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிடும் அவரது நடிப்பு. ஆதலால் அவர் எந்தப் படத்தில் அதிக சிறப்பாய் நடித்திருக்கிறார் என்று கண்டு பிடிப்பது கஷ்டமான காரியமாகும்.

இன்னொரு விஷயம்; சிறந்த சங்கீதமும் உன்னத நடிப்பும் சேர்ந்தாற்போல் ஒருவரிடமே அமைவது துர்லபம். அந்த துர்லபமான சேர்க்கையை நாகய்யாவிடம் காணலாம். நாகய்யாவின் சங்கீதம் கணீரென்று ஒலித்து தெருவில் போவோரை இழுத்து நிறுத்தக் கூடியதல்லதான். ஆனால் நீங்கள் கவனம் செலுத்திக் கேட்கத் தொடங்கி விட்டீர்களானால் அவரது கானம் உங்கள் உள்ளத்தில் ஆழப் பதிந்து விடும்.

நாம் மேலும் ஒரு படி சென்று நாகய்யாவை ஒரு "அஷ்டாவதானி" என்று சொன்னாலும் பொருந்தும். கதை, நடிப்பு, பாட்டு, சங்கீத டைரெக்ஷன், டைரெக்ஷன், பட முதலாளி ஆகிய இத்தனை வேலையையும் அவர் ஒருவரே சேர்த்துச் செய்திருக்கிறார். இதுமாதிரி பல ஜோலிகளை ஒருவரே கவனிக்கக் கூடியவர் மேனாட்டிலும் இருக்கிறாரா என்று சந்தேகிக்கிறேன்.

இவ்வளவு விஷயங்களும் அவரிடம் ஒன்று சேர்ந்திருப்பதற்காக நான் ஆச்சரியம் அடையவில்லை. இவைகளுடன் பொருந்தும் வழக்கமே யில்லாத 'தங்கமான குணமும்' அவரிடம்

ஒன்று பொருந்தி யிருப்பதைப் பார்க்கும் போதுதான் நான் ஆச்சரியம் அடைகிறேன்.

சுமார் ஆறடி உயரமும், அதற்கேற்ற பருமனும், கறுப்பு நிறமும் கூடிய அவர் முரட்டு மனிதர் போலக் காட்சியளிப்பார்; ஆனால் உண்மை அது அல்ல. யாரிடமும் பவ்யமாக நடந்து கொள்ளும் சுபாவம் உடையவர். அகம்பாவத்தின் நிழலைக்கூட அவரிடம் காண முடியாது. "நம்மால் பிறர் எவருக்கும் ஒரு சிறு வருத்தங் கூட ஏற்படக் கூடாது" என்ற கொள்கை உடையவர் அவர். படாடோபமற்ற வாழ்க்கையையே அவர் நடத்தி வருகிறார்.

நாகய்யாவின் உதார குணம் அநேகருக்குத் தெரிந்திருக்காது. தாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது கூட அவர் தர்மத்தை மறப்பதில்லை. ஆனால், "வலது கை செய்யும் தர்மம் இடது கைக்குக் கூடத் தெரியக் கூடாது" என்ற பழமொழிப்படி அவர் நடந்து வருகிறார். அவர் நடித்துக் காட்டும் பக்திமான்களின் குணங்களில் பாதியாவது அவரிடம் பொருந்தி யிருக்கிறது என்றால் பொருந்தவே செய்யும். 'இதனால்தான் அவரிடம் எல்லாத் திறமைகளும் பொருந்தி யிருந்தும், ஏராளமாகச் சம்பாதித்தும் கூட கோடீஸ்வரராய் விளங்க வில்லை' என்று சொன்னால் அது மிகையாகாது.

நாகய்யா ஒரு சிறந்த தேச பக்தர்; பொது ஜன ஊழியர். தம் பல ஜோலிகளிடையே மக்களுக்கும் இயன்ற அளவு ஊழியம் செய்து வருகிறார். சென்னை தியாகராய நகரில் தற்போது நடந்து வரும் "தியாக பிரம்ம கான சபா" நாகய்யாவின் யோசனை, முயற்சி, உழைப்பு, பணம் இவற்றின் விளைவாக உருவாகியதே.

யைக் கேட்டுவிட்டு மோட்டாரில் வந்து கொண்டிருந்தார். இரவு பத்து மணியிருக்கும். பஸ்களும் நின்று விட்டன. மழை ஒரு புறம். கச்சேரிக்குச் சென்றிருந்த அநேக ஆண், பெண் மாம்பலவாசிகள் மழையில் நனைந்தபடியே நடந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒரு அம்மாள் கைக் குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு போவதையும் நாகய்யா கவனித்தார். இக் காட்சி அவர் மனதை வாட்டியது. காரை நிறுத்தி அந்த அம்மாளையும் மற்றும் சிலரையும் மாம்பலத்தில் விட்டு வரும்படி செய்தார். பிறகு மற்றும் இரண்டு மூன்று முறை மோட்டாரை மாம்பலத்திற்கும் மைலாப்பூருக்குமாய் ஓட்டச் செய்து மற்றவர்களையும் வீடு கொண்டு போய்ச் சேர்த்தாராம். இந்த சம்பவமே தியாக பிரம்ம கான சபாவின் ஸ்தாபிதத்திற்குக் வித்தாகும்.

"நீங்கள் பல படங்களில் நடித்தும் பட முதலாளியாகியும் கூட பொருள் குவிக்கக் காணோமே! உங்கள் வாழ்க்கை லக்ஷியம்தான் என்னவோ?" என்று நாகய்யாவிடம் கடைசியாகக் கேட்டேன்.

அதற்கு அவர், "தற்போதைய பட முதலாளிகள் பணம் குவிப்பதிலேயே முனைந்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணம், செய்கை, திறமை இவற்றையெல்லாம் அதற்கே பயன்படுத்தி வருகிறார்கள். நம் நாடு சுதந்திரம் அடைந்திருக்கிறது. இதைக் காக்க வேண்டியது நம் மக்களின் கடமை. இந்தியன் ஒவ்வொருவனும் இந்தியாவின் பழம் பெருமையையும் தன் தற்போதைய கடமைகளையும் உணரும்படி செய்து, அவனை சிறந்த வீரனாக ஆக்க வேண்டும். இந்த லக்ஷியத்திற்கு ஒத்ததான படங்களையே நான் தயாரிக்க விரும்புகிறேன்" என்று கூறினார். இது அவருடைய மேதைக்கும். குணத்திற்கும் ...ற்ற லக்ஷியமா யிருந்த[illegible]

பேஷான யோசனை

[21-ம் பக்கத் தொடர்ச்சி]

புலம்பிக்கொண்டே ஏழு ராகத்தில் ஒரு விருத்தத்தைப் பாடுகிறார்.

டைரெக்டர் :—ஏழு ராகம் வேண்டியதில்லை. மூன்று ராகம் பாடினால் போதும்.

கந்தசாமி :—அப்படிச் சொல்லக் கூடாது. நம்முடைய ராமர் நன்றாகப் பாடக்கூடியவர்.

டைரெக்டர் :—யார் இல்லை என்று சொன்னது. அவரைத் தனியாகப் பாடச் சொல்லிக் கேட்டால் போச்சு.

கந்தசாமி:—ஆஞ்சநேயர், சுக்ரீவன், வாலி, ஜாம்பவான் முதலியோர் வருகிறார்கள்.

டைரெக்டர்:—ஆஞ்சநேயர் மட்டும் போதும். மற்றவர்களைப் போகச் சொல்லி விடலாம்.

கந்தசாமி :—ஆஞ்சநேயர் இலங்கைக்கு வந்து சீதையைக் கண்டு கணையாழியைக் கொடுக்கிறார்.

டைரெக்டர் :—பேஷாகக் கொடுக்கட்டும். இந்தக் காட்சியை அப்படியே எடுத்துக் கொள்ளுவோம்.

கந்தசாமி :—இலங்கைக்கு தீ வைக்கிறார்—ஆஞ்சநேயர்.

டைரெக்டர் :—கணையாழி கொடுப்பது முக்கியமா, தீ வைப்பது முக்கியமா?

கந்தசாமி :—இரண்டுந்தான்.

டைரெக்டர் :—கணையாழி கொடுப்பது மட்டும் இருந்தால் போதும். தீ வைப்பதை ஐம்பதாயிரம் அடி வந்த பிறகு பார்த்துக் கொள்வோம்.

கந்தசாமி :—ஆஞ்சநேயர் விஸ்வரூபம் எடுக்கிறார்.

டைரெக்டர் :—வேண்டவே வேண்டாம். சாதாரணமாக இருந்தால் போதும். விஸ்வரூபத்தைப் பிடிக்க பிலிமுக்கு எங்கே போவது?

கந்தசாமி :—ராம லக்ஷ்மணர்கள் இலங்கைக்குப் போக அணைக்கட்டுகிறார்கள்.

டைரெக்டர் :—அணை கட்டுவானேன்? ஏரோப்ளேனில் போகட்டுமே! இரண்டு மணி நேரப் பிரயாணம் தானே?

கந்தசாமி :—அது, நன்றாயிராது.

டைரெக்டர் :—ஏது?

கந்தசாமி :—ஏரப்ளேனில் போவது?

டைரெக்டர் :—எல்லாம் இருக்கும் ஏரேப்ளேனை புஷ்பங்களால் அலங்கரித்து விட்டால் தெரியாது. புஷ்ப விமானம் மாதிரியே இருக்கும்!

கந்தசாமி :—விபீஷணர் ராவணனுக்கு உபதேசம் செய்கிறார்.

டைரெக்டர் :—எதற்காக.

கந்தசாமி :— [illegible]

டைரெக்டர் :—இந்த உபதேசத்தை சீதையைக் கொண்டுவர இராவணன் புறப்பட்ட போதே சொல்வதற் கென்ன? இவ்வளவு அஜாக்கிரதை உள்ளவர் நமக்குத் தேவையில்லை..... அப்புறம்......

கந்தசாமி :—அப்புறம் கும்பகர் ணன் ராமருடன் யுத்தம் செய் கிறான்.

டைரெக்டர் :—அவனை சிரமப் படுத்த வேண்டாம். அவன் தூங்கிக் கொண்டே இருக்கட்டும்.

கந்தசாமி :—அதற்கு மேல் இந்திர ஜித்து வருகிறான்-அடாணா ராகத்தில் ஒரு பாட்டை பாடுகிறான்.

டைரெக்டர் :—பாடிவிட்டு வருகி றானா? அல்லது வரும்போதே பாடு கிறானா?

கந்தசாமி :—பாடிக் கொண்டே வருகிறான்.

டைரெக்டர் :—யுத்தத்திற்கு வரும் போது பாட்டென்ன வேண்டி யிருக்கு? பேசாமல் வரட்டும்.

கந்தசாமி:-இந்திரஜித்து நாகபாசத் தால் லக்ஷ்மணனைக் கட்டிவிடுகிறான். ஆஞ்சநேயர் சஞ்சீவி பர்வதம் எடுக் கச் செல்கிறார்.

டைரெக்டர் :—எதற்காக?

கந்தசாமி :—லக்ஷ்மணரை மூர்ச்சை தெளிவிப்பதற்காக.

டைரெக்டர் :—மூர்ச்சை தெளி விக்க சஞ்சீவி பர்வதம் எதற்கு? ஒரு "பென்ஸிலின்" இஞ்செக்ஷன் போதுமே.

கந்தசாமி :—அப்படிச் செய்தால் நவீனமாகி விடுமே. ராமாயணம் புராணக் கதை என்பது உங்களுக்கு ஞாபக மில்லையோ?

டைரெக்டர் :—பேஷாக இருக்கு, ஆனால் பதினாறாயிரம் அடி என்பது உங்களுக்கு ஞாபகமில்லையோ?

கந்தசாமி :—லக்ஷ்மணர் மூர்ச்சை தெளிந்து இந்திரஜித்தை கொல்கிறார். இந்திரஜித்தின் மனைவி சுலோசனை கதறுகிறாள். "ஐயோ நான் என்ன செய்வேன்" என்று பாடுகிறாள்.

டைரெக்டர் :—கதறட்டும்; பாட வேண்டாம்.

கந்தசாமி :—சுலோசனைவுக்காக நாம் புக் செய்திருக்கும் மிஸ். ரஞ்சி தம் அருமையாகப் பாடக்கூடியவள். முந்திய படங்களிலெல்லாம் அவளது பாட்டைத்தான் ஜனங்கள் மிகவும் ரசித்தார்கள்.

டைரெக்டர் :—அவ்வளவு நன்றாகப் பாடக்கூடியவள் அழுதால் எப்படி இருக்குமென்பதை இந்தப் படத்தில் தான் ஜனங்கள் பார்க்கட்டுமே.

கந்தசாமி: —கடைசியில் ராவணன் வருகிறான். யுத்தம் செய்து ராமர் கையால் மடிகிறான். சீதை மீட்கப்படு கிறாள். எல்லோரும் அயோத்திக்கு வருகிறார்கள். ராமருக்கு மகுடாபி ஷேகம் நடக்கிறது.

டைரெக்டர் :—இந்தக் காக்ஷி மட் டும் இருக்கட்டும். இப்போது நான் சொன்னதெல்லாம் புரிந்ததா? இந்தப் படியே கதையை மாற்றி எழுதிவிடும். அடுத்த வாரம் ஷூட்டிங் ஆரம்பித்து விடலாம்.

கந்தசாமி :—இப்படி எழுதினால் ஆறாயிரம் அடிக்குள்ளேயே ராமாய ணம் முடிந்து விடுமே!

டைரெக்டர் :—முடிந்தா லென்ன? பாக்கியிருக்கும் ஏழாயிரம் அடியில் மகாபாரதத்தை எடுத்து விட்டால் போச்சு. எப்படி என் யோசனை?

கந்தசாமி :—பேஷான யோசனை!

சினிமா டைரி

தேதி 134113

டிஸம்பர் 1948

1. ஜெமினி 'சக்ரதாரி'யின் பத்திரிகைக் காட்சி 'காஸினோ'வில் நடைபெற்றது.

2. 'ஆதித்தன் கனவு' தணிக்கை செய்யப்பட்டது.

3. ஜெமினி 'சக்ரதாரி' சென்னையிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

'பக்த கும்பரா' கன்னடப் படம் பங்களூரில் திரையிடப்பட்டது.

5. சினி டெக்னிஷ்யன்கள் சங்கத்தினருக்காக சுதந்திரா பிலிம்ஸாரின் 'துரோகி' திரையிடப் பட்டது.

8. எழுத்தாளர் 'ருலி' காலமானார்.

10. ஜுபிடரின் 'கஞ்சன்' சென்னை கபாலியிலும், மஹாராணி டாக்கீஸிலும் திரையிடப் பெற்றது.

11. மாடர்ன் தியேட்டர்ஸ் 'ஆதித்தன் கனவு' சென்னை, பிரபாத், ஸன், ஸரஸ்வதி ஆகிய மூன்று தியேட்டர்களிலும் வெளியூர்களிலும் முதன் முதலாக திரையிடப்பட்டது.

14. திருமங்கலத்தில் 'ஆனந்தா டாக்கீஸ்' என்ற புதிய தியேட்டர் ஆரம்பமாயிற்று.

19. ஸ்ரீ. புல்லா ரெட்டி தலைமையில் சினி டெக்னிஷ்யன்கள் கூட்டமொன்று நடைபெற்றது.

20. 'ஜுக்னு' ஹிந்திப் படத்தை சென்னை மாகாணத்தில் திரையிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டது.

கல்வி மந்திரி கனம் அவினாசிலிங்கம் செட்டியாரின் தலைமையில் சினிமா தணிக்கை போர்டுக் கூட்டம் நடைபெற்றது.

22. அடிக்கட்டுப்பாடு சம்பந்தமாக விவாதிக்க பிலிம் சேம்பரின் ஒரு கூட்டம் நடைபெற்றது.

23. எர்ணாகுளத்தில் 'பத்மா டாக்கீஸ்' என்ற தியேட்டரின் ஆரம்ப விழா நடைபெற்றது.

24. சென்னையில் அகில இந்திய பொருட்காட்சி ஆரம்பமாயிற்று.

பல்லாவரம் நேதாஜி டூரிங் டாக்கீஸில் 'போஜன்' திரையிடப்பட்டது.

கல்கத்தாவில் மூன்று தியேட்டர்களில் ஹிந்தி "சந்திரலேகா" திரையிடப்பட்டது.

சென்னை மஹாஜன சபா ஹாலில் அடிக் கட்டுப்பாட்டை கண்டிக்க ஒரு கூட்டம் நடைபெற்றது.

26. ஓங்கோலில் 'ஸ்ரீ ஜெயலக்ஷ்மி டாக்கீஸ்' என்ற புதிய தியேட்டரை மந்திரி கனம் கே. சந்திரமௌளி ஆரம்பித்து வைத்தார்.

'டாக்குமென்டரி பிலிம் போர்டு' என்ற ஸ்தாபனம் நிறுவப்பட்டது.

பல ஆயிரம் பேர்கள் படித்துவிட்டனர்

நீங்களும் படியுங்கள்

"குண்டூசி" எழுதிய

நட்சத்திர மாலை

இரண்டாம் புத்தகம்

எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன்-மதுரம், ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். கோவிந்தன், காமடியன் சாரங்கபாணி, எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, குமாரி ருக்மணி, வஸந்த கோகிலம், தனலக்ஷ்மி, குமுதினி, சந்தானலக்ஷ்மி போன்ற

21 நட்சத்திரங்களின் வாழ்க்கை வர்ணனை

அடங்கியது

16 அழகிய ஆர்ட் படங்களுடன்

விலை ரூ. 2. தபாற் செலவு அணா 6.

வேண்டுவோர் ரூ. 2-6-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

குண்டூசி காரியாலயம் 246, தம்புச் செட்டித் தெரு, சென்னை 1.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty Street, Madras 1.

மங்களகரமான பொங்கல் வாழ்த்து!

கண்ணுக்கு அழகு.
கருத்துக்கு விருந்து.
குடும்பத்தினரனைவ
ருக்கும் அரிய
பொங்கல் பரிசு!



★

மாடர்ன் தியேட்டர்சின்

ஆதித்தன் கனவு

பஸ்மாசுர - மோஹினி
நடனம்

அன்னம் - சுடலை
காமிக்

வளைசல் ஒய்யாரம்

பார்க்கப் பார்க்கத்
திகட்டாதவை!

டைரக்ஷன் :— டி. ஆர். சுந்தரம், B.A., B.Sc. (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

சேலம் & மதுரை.